www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.04 திருவள்ளுவர் ஆண்டு 2052

14.09.2021 - 13.10.2021

ISSN : 2195-6480



FREE Magazine

இசை

அத்தியாயம் சரிந்தது

வர்ண ராமேஸ்வரன்

வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை

அஞ்சலா மெர்க்கல்

நம்பிக்கை இல்லாமல் தேசம் இல்லை

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA




Rheinische Str.79-44137-Dortmund

tksbestfoods

0049 231 950 468 83

www.tksbestfoods.de

tks-bestfoods@web.de

TREUE BONUS 2)

ortel MOBILE



SMART WORLD

## 20 countries
## 250 minutes

250 minutes from
Germany to 20 countries

250 minutes from
Germany to Eu

Internet Flat Highspeed up to 8GB

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

# OHNE PAUSE NACH HAUSE.




**Ortel. Wir sprechen Deine Sprache.**

Google play App Store

**Aufladbar mit:** ortel MOBILE O2 e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.

AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14 புரட்டாசி 2021 - 13 ஐப்பசி 2021
சுவடி / ISSUE 9.04

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.**

# மீண்டும் எழுவோம்! வெல்வோம்!!

ஈழத் தமிழ் மக்களின் தாயக விடுதலைப் போராட்டம் ஒவ்வொரு நிமிடமும் கை நழுவிக் காணாமல் போய்விடும், எல்லையைத் தொட்டுவிடும் ஆபத்தில் நாம் இருக்கிறோம். தாய்த் தமிழ் ஈழக் கனவு கருத்தரித்த வல்வெட்டித்துறை நகரசபை, இன்று தமிழ் இனத் துரோகிகளின் கால்களில் விழுந்து விட்ட செய்தி தமிழ் ஈழ மக்களின் செவிகளில் பேரிடியாக விழுந்துள்ளது.

கண்ணீரும், செந்நீரும் சிந்தி வளர்த்த கற்பகதரு இவ்விதம் அழிந்து போக நாம் விடலாமா? எமது அடுத்த தலைமுறைக்கு நாம் என்ன செய்தியை விட்டுச் செல்லப் போகிறோம்?

மேதகு தலைவர் புலம்பெயர் மக்களிடம் ஒப்படைத்த பணியை நாம் எவ்வாறு செய்து முடிக்கப் போகிறோம்?. இந்தத் தலைமுறைதான் ஒற்றுமை இன்மையால் அழிந்தது என்றால், அடுத்த தலைமுறையுமா ஒற்றுமையாகச் செயற்படாமல் உலகத்தின் முதல் இனமாகத் தோன்றிய எம் இனமும், மொழியும், வரலாறும் உலகப் பரப்பிலே



இருந்த இடமே இல்லாமல் போய்விட நாம் காரணமாவதா?

நாம் பட்ட வலிகளும், அவமானங்கள், உயிர், உடல், உழைப்புகள் எல்லாம் எமது அடுத் தலைமுறை அறியாமல் வளர்த்து, அவர்களை நாடும், வீடும், வரலாறும் இல்லாத நாடோடி இனமாக குறவர்களின் வாழ்வியலில் வாழ விட்டுச் செல்வதா?

புலம்வாழ் தமிழர்கள் நமது இளம் தலைமுறையினரை அரசியல் போராட்டத்தில் வலுவான அறிவுப் படையாக ஒற்றுமையுடன் இந்த நூற்றாண்டின் இன அழிப்புப் போருக்கான பொறுப்பையும், நீதியையும் அனைத்துலக சட்ட விதிகளுக்கு அமைவான தீர்வுகளையும் வென்றெடுக்கும் வகையில் அவர்களின் கல்வியை நெறிப்படுத்துவது எமது கடமை என்பதை நாம் மறக்கவோ, தவறவோ கூடாது.

அண்மைச் செய்திகளின் படி எமது தீவுப் பகுதிகள் எல்லாம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டு, அந்நிய நாடுகளின் சுரண்டல் மண்ணாக அங்கே தமிழர்கள் அடிமைக் கூலித் தொழிலாளிகளாக மாற்றப்பட்டு வரும் அவலம், அவசர கதியில் அரங்கேறி வருகிறது.

ஆனால், த.தே.கூட்டமைப்போ வழமை போல ஒருவரை ஒருவர் பொய் புறணி பேசி, சண்டையிட்டு ஆதிக்க சக்திகளின் அடிமை வாழ்வில் எமது மக்களை உள்ளாக்கி வருகின்றனர். ஆனால், தேசத் துரோகிகளை அழித்தும், அந்நியப் படைகளை வெற்றிகரமாக நாட்டில் இருந்து விரட்டியும், அண்மையில் ஆப்கானிஸ்தானில் தன்னாட்சி அமைத்த தலிபான்கள், ஐ.நா.சபையில் பேச அனுமதி கேட்கிறார்கள் என்கிற செய்தி, எமக்கும் ஒரு பாடமாகும். எமது புலம் வாழ் ஈழத் தமிழ் மக்கள் உலக விடுதலை மக்கள் அமைப்புகளுடன் இணைந்து, அரசியல் போராட்டங்கள் மூலம் இழந்த நாட்டையும், வீட்டையும் மீட்டெடுக்க உறுதி எடுப்போமாக. மீண்டும் எழுவோம்! வெல்வோம்!! என்கிற உறுதியுடன் விடைபெறும்..

**ஆசிரியர்,** அகரம் குழுமம்




**த. எதிர்மன்னசிங்கம்**

ஈழத் தமிழ் இன விடுதலைப் போரின் விளைநிலமாக விளங்கிய வல்வெட்டித்துறை நகரசபையின் அதிகாரம், இன்று தமிழ் தேசியவாதிகளின் கைகளை விட்டு, தமிழின விரோதிகளின் புலிகள் எதிர்ப்பாளர்களின் கட்டுப்பாட்டில் கைமாறி உள்ளது. இந்தப் புண்ணியம் திரு.சுமந்திரனின் சூழ்ச்சியால் சாத்தியமானது என்கிறார் திரு. சிவாஜிலிங்கம்.





> **அவர் பரமசிவன் தலைகளில் இருந்து, "கருடா சௌக்கியமா?" எனக் கேட்கும் பாம்பை மிஞ்சும் வன்மம் நிறைந்த மனிதர்.**

# தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்ற விசாரணை கேட்கவில்லையாம்

திரு.சுமந்திரன் த.தே.கூ. இணைக்கப்படும் முன்னரே, ஐ.தே.க. ஆயுட்கால உறுப்பினர் என்பதும், அவருக்குச் சம்பந்தன் வழங்கிய த.தே.கூட்டமைப்பில் அரசியல் முக்கியத்துவம் ஒரு சிறப்புத் தகமையாகச் சொல்ல முடியும். கூட்டமைப்பில் இணைந்த பின்னர், தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளில் தம்மை



ஈடுபடுத்தியும், பாராளுமன்றத்தில் கர்ச்சித்தும் தன்னை ஒரு தமிழ் தலைவனாகக் காண்பிப்பதில் வெற்றியும் கண்டார்.

அதன் பின்னர்தான் அவரது உண்மை முகம் வெளியில் தெரிய வந்தது. தமிழ் மக்கள் வெகுண்டெழுந்து அவரைச் சென்ற இடம் எல்லாம் எதிர்ப்புகளைத் தெரிவித்து சண்டைகளும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தினர். ஆனால், அவருக்குப் பின்னால் இயங்கிய சம்பந்தன், ரணில் விக்கிரமசிங்க இலங்கை-இந்திய-அமெரிக்க அரசுகளின் ஆதரவுத் தளங்களால் யாராலும் அசைக்க முடியாத அளவுக்கு அசுரபலம் பெற்று விட்டது.

அவரைக் கொல்ல புலிகள் திட்டம் இட்டார்கள் என இலங்கை அரசு முன்னாள் போராளிகள்



**இன்றுவரை எந்தவித விசாரணைக்கும் இடம் அளிக்காமல், புலிகளைத் திட்டுவதிலும் அவர்களுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை வேண்டும் என்றும், முஸ்லீம்களிடம் புலிகள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், தான் தமிழனாகப் பிறந்து விட்டதால் புலிகளால் ஏற்பட்ட தலைகுனிவால் வருந்துகிறேன் என்றும் கூறி வருகிறார்.**

சிலரைக் கைது செய்து சிறைப்படுத்திய பொழுது, அவர்களைத் தான் மன்னிப்பதாக மகாத்மா காந்தி அவதாரம் எடுத்து, தமது விஸ்வரூப தரிசனத்தை உலகத்துக்குக் காண்பித்தார். பொத்துவில் தொடக்கம், பொலிகண்டி வரை காந்தியின் நடைப் பயண யாத்திரை காட்டி, தமிழ் மக்களின் கண்களில் மண்ணைப் போடும் வித்தை காட்டினார்.

இவை எல்லாம் அவரது முறையற்ற தேர்தல் வெற்றிகளைப் புனிதப்படுத்தும் முயற்சிகள் என்பதை மக்கள் அறிவார்கள். ஆனால், அந்த மக்களின் தேர்தல் முடிவுகள்தான் மக்களின் கைகளில் இல்லாமல், இலங்கை - இந்திய அரசுகளின் பணத்திலும், நேர்மை அற்ற அதிகாரிகளின் கை வண்ணங்களாலும், அவரது பதவி நாற்காலிகள் பலமாக மாறிவிட்டன. செப்டெம்பர் 10ம் திகதி யாழ்ப்பாணத் தமிழ் தேசியக் கூட்டணியின் அலுவலகத்தில் நடத்திய ஊடகர்களின் சந்திப்பில், இந்தக் கலியுக அரிச்சந்திரன் இப்படிக் கூறியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

***"2012 ஆண்டிலிருந்து உலகநாடுகளிடம் நீதி கோரி, பேச்சு வார்த்தை நடாத்தி, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றோம். அது தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாகக் கிடைத்தது. அது அனைவரும் அறிந்த விடயமாகும்."***

இக்காலப் பகுதியில் கூட்டமைப்பு நடத்திய சந்திப்புகளில், எத்தனை பேர்? யார் யாரெல்லாம் கலந்து பேசினார்கள்? என்ன பேசினார்கள்? என்பதை வேறு எவரும் அறியாமல், ரகசியச் சந்திப்புகளை நடத்தி விட்டு, விவரம் எதையும் வெளியிடாமலே வேடிக்கை காட்டியதையும் உலகம் அறியும். இன்றுள்ள கூட்டமைப்பின் தலைவர்களில் பொய், புரட்டு புரணிகள் எவையும் பேசாத ஒரு தலைவர் யாரென்றால், சின்னக் குழந்தையும் சொல்லி விடும் சூப்பர் ஸ்டார் என்று, அவரை விட்டால் தமிழ் மக்களின் தலைவர் யாரும் கிடையாது. அந்த அளவுக்கு அவரைத் தூக்கி நிறுத்த நியூயோர்க் தொடக்கம், புது டில்லி, இலண்டன், பாரீஸ், கொழும்பு எனப் பல உள்நாட்டுப் பிராந்திய சர்வதேச அரசுகள் இரவு, பகல் அயராது உழைக்கின்றன.

தமிழ் மக்கள் என்னதான் அவர்களைப் புறந்தள்ளித் திட்டித் தீர்த்தாலும், தமிழ் இன தேசிய விரோத நச்சு மரங்களைத் தமிழ் மக்களின் நிரந்தர ஏகப் பிரதிநிதிகளாகக் கட்டமைத்து, உலக அரங்கில் நிறுத்துவதில் இந்த அரசுகள் வெற்றி பெற்று வந்துள்ளன. அதன் வெளிப்பாடுதான் கடந்த 2 பாராளுமன்றத் தேர்தல்களிலும் திரு.சுமந்திரன் பெற்ற வெற்றிகள் பல தோல்விப் படிகளைத் துவம்சம் செய்து, வெற்றிகரமாகப் பணம், பதவி, புகழ் எனப் 16 வகைச் செல்வங்களையும் அனுபவிக்க முடிகிறது.

சென்ற தேர்தலில் திருமதி ரவிராஜின் வெற்றியைப் பறித்து, தனதாக்கியதும் அல்லாமல், உலக அரங்கில் கண்ணியம் மிக்க உலக நாயகன், தமிழ் மக்களின் தவப் புதல்வன் எனப் பாராட்டப்படும் தமிழ் மக்களின் தலைவராக வலம் வருகிறார். விடுதலைப் புலிகளைத் தயவு தாட்சண்யம் பார்க்காமல், உண்மைகளைப் புட்டு வைக்கும் தனித் திறமை அவருக்கு உண்டு. பல தடவைகளில் புலிகளால் தமக்குப் பெரும் தலைக்குனிவும், அவமானமும் ஏற்பட்டு விட்டது எனப் பகிரங்கமாக அழுது புலம்பிய காட்சிகளைத் தமிழ் மக்கள் பார்த்துள்ளனர்.

அவர் பரமசிவன் தலைகளில் இருந்து, “கருடா சௌக்கியமா?” எனக் கேட்கும் பாம்பை மிஞ்சும் வன்மம் நிறைந்த மனிதர். அவரைத் தமிழ் மக்களின் தலைகளில் பாராங் கற்களைப் போடும் சதனையாளராக விளங்கும் திரு.இரா.சம்பந்தன் தமது தமிழின விரோத அரசியலை முன்னெடுக்க, தமிழ் தேசியக் கூட்டணியில் இணைத்து இப்பொழுது தந்தை செல்வாவின் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவி வரை கொண்டு வந்து விட்டார்.

இரண்டு வருடங்களாக இலங்கை அரசு, ஐ.நா.மனித உரிமை ஆணைக் குழுவை ஏமாற்ற உதவியவர் சுமந்திரன்.



இன்றுவரை எந்தவித விசாரணைக்கும் இடம் அளிக்காமல், புலிகளைத் திட்டுவதிலும் அவர்களுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை வேண்டும் என்றும், முஸ்லீம்களிடம் புலிகள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், தான் தமிழனாகப் பிறந்து விட்டதால் புலிகளால் ஏற்பட்ட தலைகுனிவால் வருந்துகிறேன் என்றும் கூறி வரும் இவர், இன்று இப்படிக் கூறி வருகிறார்.

இப்படிப்பட்டவர் இன்னும் என்னவெல்லாம் பேசுவாரோ, செய்வாரோ யாருக்குத் தெரியும்? 1942 தொடக்கம் தமிழினத்தை அழிவுக்கு எடுத்துச் சென்ற எல்லா அரசியல் துரோகிகளின் மொத்த வடிவமாக உருவெடுத்துள்ள சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் தலைவராகிய பின்னர், இலங்கையின் தமிழ் இனம் என்கிற வரலாறே அடியோடு இல்லாமல் போய்விடும் ஆபத்து அப்பட்டமாகத் தெரிகிறது.






வாடிக்கையாளர்களின் பேராதரவுடன் 20ஆம் ஆண்டில்....
மாபெரும் ராஜ முத்திரை
SINCE 2003
S.K. Silks & Gold Paradise
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
19ம் ஆண்டு நிறைவின் தீபாவளி சிறப்பு மலிவு விற்பனை ஒக்டோபர் 15, 16 ஆம் திகதி
புடவைகள் 10€ முதல்
ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்



தேவன்

## ஆப்கான் பாக்கிசுதான்

# தலிபான்கள்

தீவிரவாத இயக்கமாகப் பிரகடனப் படுத்தப்பட்ட தலிபான் அமைப்பை, அதே வாயால் ஆப்கானிசுத்தானின் வல்லமை பொருந்திய ஆளும் தரப்பாக அமெரிக்கா பிரதிநிதித்துவப்படுத்தும் என யாரும் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்கள். வடிவேலுவின் நகைச்சுவை மொழியில் சொல்வதானால் 'அதுவேற வாய், இது வேற வாய்' என்பது போலவே இருக்கிறது அமெரிக்காவின் ஆட்டம். இந்தக் கெடுபிடி ஆட்டத்திற்குள் அமெரிக்கா தன்னை நுழைத்துக் கொண்டதற்கான அடிப்படையில் பல அவசர நன்மைகளுக்கான விலைப் பட்டியல் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு இரண்டாம் மாதம் அமெரிக்கத் தரப்புப் பிரதிநிதிகள் அரபு நாடான டோகா-வில் *(Doha)* தலிபான்களைச் சந்தித்தனர். இச்சந்திப்பில் இரு தரப்பிற்குமிடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டிருந்ததாக *ZEE News* இந்தியா என்ற செய்தித்தளம் கூறுகின்றது. அடுத்த 14 மாதங்களுக்குள் அமெரிக்காவை மையப்படுத்திய *NATO* படையினர் வெளியேற வேண்டுமென அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. தலிபான்கள் எக்காரணம் கொண்டும் அல்-குவைடா அமைப்புடன் சேரக்கூடாது என்பது உள்ளிட்ட பல நிபந்தனை அமெரிக்கா விதித்திருந்தது.

படை விலகலினால் ஆப்கானிசுத்தானின் எதிர்காலம் எப்படி அமையும்? என்பதைவிட, இதற்குப் பின்னர் இடம்பெறப் போகின்ற பூகோள நகர்வுகள் பற்றியே இங்கு பிரதானமாக நோக்க வேண்டும். ஐந்து காரணங்களை நோக்கலாம்.

ஒன்று- இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் சீனாவுடனானப் போட்டியில் அமெரிக்காவினால் இந்தியா தலைமையில் உருவாக்கப்பட்ட குவாட் இராணுவ அணியின் செயற்பாடுகள் இலங்கையை மையப்படுத்திய கடற்பகுதியில் தீவிரமடையும்.

இரண்டாவது- அமெரிக்காவின் பிடிக்குள் இந்தியா இன்னும் அதிகமாகச் சிக்கக்கூடிய ஆபத்துகளும், அமெரிக்காவுடன் 2016ஆம் ஆண்டில் இருந்து 2020ஆம் ஆண்டு வரை செய்யப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தங்களில் இருந்து இந்தியா ஒருபோதும் விலக முடியாதச் சூழலும் உருவாகும்.

மூன்றாவது- படைவிலகல் சீனாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், மிகவும் கிட்டிய தூரத்தில், அதாவது சீனாவின் வாசலில் உள்ள ஆப்காணிஸ்தான் மற்றும் அதன் அயல் அயல்நாடுகளுடனான பொருளாதார உறவுகளை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை.

நான்காவது - ரஷியாவுக்கும், தலிபான்களினால் ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை.

ஐந்தாவது - நேட்டோ அணியில் இந்தியா இல்லாவிட்டாலும், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் ஏற்பட்ட உறவினால் ஆப்கானிசுத்தானில் இந்தியா மேற்கொண்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும், முதலீடுகளுக்கும் ஆபத்து.

இந்த ஐந்து காரணங்களையும் ஆராய்ந்தால், முதலில் அமெரிக்காவுக்கு இது பெரிய பாதிப்பல்ல. ஏனெனில் ஆப்கானிசுத்தானில் நேட்டோ படைகள் கடந்த இருபது ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த காலங்களில் அதிகளவு செலவிட்டது அமெரிக்காதான். ஐரோப்பிய நாடுகள் தத்தமது படையினருக்காக அதிகளவு செலவுகளை மேற்கொள்ளவில்லை. இதுபற்றிய கவலையை ***Joe Baiden*** கடந்த யூன் மாதம் பிறேசிலில் நடைபெற்ற ***NATO*** மாநாட்டில் வெளியிட்டிருந்தார்.

இந்தச் செலவுகளைத் தவிர்த்து, இதற்குமப்பால் அமெரிக்காவின் எதிர்காலத்திற்கும், அதன் பொருளாதார வல்லமைக்கும் வலுச்சேர்க்கும் விதமாகவும் ***JOE Baiden*** தீட்டிய அல்லது அமெரிக்காவின் வெள்ளை மாளிகை நிபுணர்கள் தீட்டிய திட்டங்களும்




அடங்கும். மேலோட்டமாக இவற்றை விவரிப்பதற்கு முன்னர், இத்தனை நாளும் அமெரிக்கா ஆட்சி புரிந்த ஏதாவது ஓர் நிலப்பரப்பை விட்டு முற்றுமுழுதாக விலகியிருக்கிறதா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சர்வ வல்லமை பொருந்திய யேர்மனியில் கூட, இன்னமும் அமெரிக்கா தனது தளங்களை வைத்திருக்கும் நிலையில், சாதாரண ஆப்கானிசுத்தானை விட்டு அவசர வெளியேற்றம் என்பது சற்றே ஆச்சரியமூட்டும் செயற்பாடல்லவா..?

சீனாவின் பொருளாதார வல்லமையைச் சீர்குலைத்தல் அமெரிக்காவின் விலைப் பட்டியல்களில் அதிமுக்கிய இடத்தைப் பிடிக்கிறது. சமவேளையில் இதையே சீனாவும் புரிந்து கொண்டு நகர்கிறது என்பதையும் வரிசைக் கிரமப்படி தருகிறேன். முதலில் சீனாவின் பட்டுப்பாதை *(Silkway)* திட்டமானது, யேர்மனி வரை நீளும் முக்கிய பாதையில் ஆப்கானிசுத்தான் தனது வல்லமையைச் தீர்மானிக்கும் இடமாக இருக்கிறது. இந்தப் பாதையின் ஊடாக சீன வியாபாரம் வேகமாகவும், அதிக இலாபத்தை ஈட்டும் வகையிலும் சிறப்பாக நடைபெறுகிறது. இச்சமநிலையை குழம்ப வேண்டுமாயின் அமெரிக்காவின் பாதுகாப்பு ஆப்கானிசுத்தானில் இருந்து விலக்கப்பட வேண்டும்.

பட்டுப் பாதையை அண்மித்த நாடுகளுக்கு விஜயம் செய்த சீன அதிபர் ***XI Jinping***, அப்பாதையைப் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு என்னவிதமான அணுகுமுறைகளைக் கையாள்கின்றார் என்று பார்ப்போம். இங்கு சீனாவின் பிரயோக அணுகுமுறையில் இருதரப்பு நாணயப் பண்டமாற்று *(Currency Swap)* ஒப்பந்தம் என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதொரு முக்கிய விவகாரமாக காணப்படுகிறது.

அதாவது வர்த்தக பரிமாற்றங்கள் மற்றும் ஏனைய உடன்பாடு காணப்பட்ட விடயங்களில், இலங்கையின் தேசிய நாணயத்தை (ரூபாய்) சீனாவின் தேசிய நாணயத்தால் (யுவான்) மாற்றீடு செய்யலாம் என்று இவ் ஒப்பந்தம் கூறுகிறது. அதாவது 3 வருட கால எல்லைக்குள், 225 பில்லியன் ரூபாய்கள்




(US $1.63 பில்லியன்), 10 பில்லியன் சீன யுவானுடன் நாணய பண்டமாற்றிக்கு பயன்படுத்தப் படலாம்.

அதேவேளை, இந்தியாவுடனான நாணயப் பண்டமாற்றின் அவசியம் (அதாவது பிரத்தியேகமான ஒப்பந்தம்) சீனாவிற்கு இருக்கப் போவதில்லை. ஏனெனில் பிரிக்சு அமைப்பு, 100 பில்லியன் டொலரில் உருவாக்கும், சாங்காயைத் தளமாகக் கொண்டு இயங்கப் போகும் 'புதிய அபிவிருத்தி வங்கி', நாணயப் பண்டமாற்றினை அந்நாடுகளிடையே கட்டாயம் அறிமுகம் செய்யும். சீனாவின் நீண்டகால நோக்கமும் அதுதான்.

'சர்வதேச நாணயம்' என்று, இரண்டாம் உலகப்போர் காலத்திலிருந்து சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலரிற்கு மாற்றீடாக, யுவானைக் கொண்டு வர வேண்டுமென்பதே சீனாவின் பெருங் கனவு. அக்கனவு மெய்ப்பட, இந்த நாணயப் பண்டமாற்று உத்தியைக் கையாளத் தொடங்கியுள்ளது சீனா. இதன் விளைவாக, இருதரப்பு வர்த்தகம் சீனா சார்பாக அதிகரிக்கும். சீனாவின் வர்த்தக உபரியும் கூடும். காலப்போக்கில், இவ்வாறான ஒப்பந்தங்கள் மேற்குலகின் ஆசீர்வாதம் பெற்ற அனைத்துலக நாணய நிதியத்தையும், உலக வங்கியையும் ஓரங்கட்டிவிடக் கூடிய நிலையைச் சாத்தியமாக்கி விடலாம்.

சீனாவின் இந்தத் தூரநோக்கு நடைமுறைக்கு வரும் பட்சத்தில்



அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

அமெரிக்காவின் டொலர் கிணறு வற்றிப் போகும் அபாயத்தை எட்டும். டொலரை அடிப்படையாக வைத்து நடைபெறும் சர்வதேச நாணய நடைமுறை சீர்குலையும். இதற்கு முன்பதாக, சீனா 60 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணித்த பட்டுப் பாதையைச் சீர்குலைத்துவிட, தலிபான்களிடம் நாட்டைக் கையளிப்பதே சிறந்தது என்ற நிலையை அமெரிக்கா அவசரமாகத் தீர்மானித்திருக்க வாய்ப்புண்டு.

ஆனால் மறுபுறமாக, ஆப்கானிசுத்தானில் தற்போது நிலைகொண்டிருக்கும் தலிபான்களில் பெரும்பான்மையோர் ஆப்கானிசுத்தானைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் அல்லர். தலிபான்கள் என்ற பெயரில் ஆப்கானில் இப்போது ஆயுதமேந்தியிருப்பவர்கள் பாக்கிசுத்தானைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். பாகிசுத்தான் இவர்களை எதற்காக, எந்த நாட்டின் பேரம் பேசுதலில் ஆப்கானிற்குள் களமிறக்கியிருக்கக் கூடும் என நினைக்கிறீர்கள்..?

இந்த ஆட்டத்தை மறு ஆட்டமாக மாற்றியிருக்கும் அந்த நாயகன் சீனா தான். அவ்வாறே அமெரிக்காவால் நிதியுதவி மற்றும் ஆயுதங்கள் பெறுகின்ற ஆப்கானைப் பிறப்பிடமாகக் கொண்ட தலிபான்களும் ஆப்கானில் நிலை கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில், கூலிப்படைகள் போல இரண்டு வகையான தலிபான்களும் மோத வேண்டிய சூழ்நிலையை உருவாக்கும்



**"சாதிக் கொடுமைகள் வேண்டாம், அன்பு தன்னீர் சிறந்திடும் வையம்'' என்றான் மாண்டுபோன சீர்திருத்தவாதி பாரதியார். யார், எப்படி வாழ வேண்டும்? என்று உலகில் எந்த நியதிகளும் இல்லை. ஆனால், பொதுவீர் மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று நியதிகள் உண்டு. கீழ் சாதி, மேல் சாதி என்ற பாகுபாடு ஏன் உருவாகின்றது?**

## இலங்கையின் வடக்கில் மீண்டும் உண்டாக்கப்படும்

# சாதியப் பிரச்சினை

**ப்ரியமதா பயஸ், தமிழீழம்**

அண்மைக் காலமாக வடக்கில் சாதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சிறிது, சிறிதாக கிளறிவிடப் படுகின்றதை உணர முடிகின்றது. சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் சாதி தொடர்பான விடயங்களைப் பொருத்தம் இல்லாமல் இணைத்து, பெரும் சாதிப் பாகுபாட்டை கிளற முற்படுகின்றனர். 1960களிலும் அதன் பின்னையக் காலத்திலும் சாதி என்பது மிகப்பெரும் அளவில் வடக்கில் தலைவிரித்து ஆடியமை உண்மையே!.

காலப்போக்கில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் அதிகரித்திருந்த சமூக நிலையிலும், பின்னரான அரசியல் நிலையிலும் சாதி பற்றி பேச்சுக்களோ, அது தொடர்பான எந்த விடயங்களுமோ பொது வெளிக்கு வரவில்லை. அதனைத் தொடர்ந்து 2009 யுத்தத்திற்கு பின்னரானக் காலப்பகுதியின் கடந்த 8-10 வருடங்களாக ''சாதி'' என்ற விடயம் அடக்கியே வாசிக்கப்பட்டது.

ஆனால், கடந்த இரு வருடமாக ''சாதி'' என்ற வார்த்தை விருந்துகள், விழாக்கள், அரசியல் சமூகம், என்ற அனைத்து மட்டத்திலும் ஏதோ ஒருவகையில் திணிக்கப்பட்டு, பூதாகரமாக ஆக்கப்படுகிறது. இதன் பின்னணி என்ன? என்ற கோணத்தைக் கண்டிப்பாகத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

''சாதி இரண்டொழிய வேறில்லை'' என்பது பெரும் மதிப்பிற்குரிய உண்மை. இதைப் பேணி நடக்க முற்பட்டவர்கள் மீண்டும் குளறுபடிகளைச் செய்ய விளைவது, இக்கட்டில்

இருக்கும் தமிழனத்தின் ஒட்டு மொத்த வீழ்ச்சிக்கும் காரணமாகி விடும் என்பதை சகலரும் உணருங்கள்.

ஆரம்பகால அரசியல் பின்னணிகளில் இருந்த சாதி தொடர்பான விடயங்களே காலப்போக்கில், தமிழனின் உயரா நிலைக்கு வித்திட்டது என வாதிடும் வயதானவர்கள் தற்போதும் உள்ளனர்.

திருமண முறிவுகள், வாழ்வியல் விடயங்கள், ஏன் தற்போது தொழில் விடயங்கள், மற்றும், திறமை விடயங்களில் கூட சாதி பற்றிய பிறர் நிலைகள் ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டுணர முடிகின்றது. நவீன யுகமாக மாறும் உலகப்பரம்பல் போக்கில், வெறும் எண்சாண் உடம்பின் இயக்கம் மாறாத மனிதன் சாதி என்ற பாகுபாட்டை வரிந்து கட்டிக் கொண்டு வாழாது, ஒழிந்து போதல் எந்த விதத்தில் நியாயம்?

**“ஆலயங்களில் இடம்பெறும் ஆலயத் தேர் இழுப்பு சம்பவங்களில் சில மக்கள் சமூகத்தினர் ஒதுக்கப்படுவது சமூகத்திலும், சமூக ஆர்வலர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும் வகையில் பூதாகரமாக ஆக்கப்பட்டுள்ளது.”**

அயல் நாட்டில் இடம் பெறும் ஓரிரு சம்பவங்களின் எதிர் வினையிலும், இலங்கையின் வடக்கிலும் தாக்கத்தை உண்டு பண்ணியதா? என எண்ணத் தோன்றுகின்றது.

உணவு, உடை, மனித வாழ்வியல் என்பன மாற்றங்கண்டு வரும் தற்போதைய நிலையில், சாதி பற்றி பிறள்வான தோற்றப்பாட்டை தோற்றுவிக்கும் அந்த வேண்டாத சக்தி எது? அதன் பின்னணியில் யார் இருக்கின்றார்? என்பதை சமூக அக்கறை உடையவர்கள் கண்டுணர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருப்பதை மறுக்க முடியாது.

இன வன்முறை, மத வன்முறை என்பன தற்போது தலைநிமிர தொடங்கியுள்ளது. மதம் சார்ந்த சார்பு நிலை கருத்துகள் சாதீய பாகுபாடுகளை உருவாக்குவதை கண்டுணர முடிகிறது. உயர் குலம், தாழ்குலம் என்பதெல்லாம் மதம் சார்ந்த விடயங்களுக்கு அப்பாற்பட்டவை என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து கொள்ள வேண்டும். “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்ற வாக்குகள் ஏன் கூறப்பட்டன? என்பதை நன்குணர வேண்டும்.

வேண்டாத, நியாயமில்லாத விடயங்களை சாதீய பாகுபாடாக்கி, வீணே சமூகத்தை குழப்புவதில் எதை காண விளைகின்றனர் குழப்பவாதிகள்? இப்போது பலருக்கு நெருக்கடிகள் குறைந்து விட்டன. பணவரவுகளும், சமூக நிலைமையும் வேறென்றே செய்யலாம் என்ற எண்ணத்தை தோற்றுவித்து, சாதியத்தில் வைத்து




குழப்புகின்றனரா? என எண்ணத் தோன்றுகின்றது.

சின்னச் சின்ன பொருத்தமில்லாத விடயங்கள் சாதியத்தின்பால் உள்வாங்கப் பட்டு, பூதாகரமாக மாற்றப்படுவது இயல்பானதோ, அல்லது ஆரோக்கியமானதோ அல்ல. இது கண்டிப்பாகத் தமிழன் என்ற இனத்தின் ஒட்டு மொத்த நல்லெண்ணங்களையும் திசை திருப்பி, ஒற்றுமை இன்மையை ஏற்படுத்தி, வாழ்வியல் பிறள்வை ஏற்படுத்தும் திட்டமிட்ட செயலாகவே கருத வேண்டியுள்ளது.

ஆலயங்களில் இடம்பெறும் ஆலயத் தேர் இழுப்பு சம்பவங்களில் சில மக்கள் சமூகத்தினர் ஒதுக்கப்படுவது சமூகத்திலும், சமூக ஆர்வலர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும் வகையில் பூதாகரமாக ஆக்கப் பட்டுள்ளது. எந்த காலத்திலும் நடை பெறாத இந்தச் சம்பவம், சாதியப் பிரச்சினையைத் தூண்டி விடுவதற்குச் சாதகமாகப் பயன்படுத்தப் படுகிறது.

சில விசமத் தனமான செயற்பாடுகள் ஒட்டு மொத்த வடக்கு மக்களின் சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்த வினைகின்ற அந்த உண்மையை சகலரும் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு சிலரின் ஏகாதிபத்தியச் சிந்தனைக்கு நாம் இடங்கொடுக்க முடியாது.

சமூக வாழ்வியலின் சீரிய பக்குவமே இனிக்காலத்தால் ஒட்டு மொத்த தமிழன் வாழ்விலும் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதனை, நாம் மறந்துவிடக் கூடாது. வேண்டாத சக்திகள் தலைதூக்கவே முனைவர். எம் ஒட்டு மொத்த ஒற்றுமையால் மட்டுமே வேண்டாத காரியங்களை எம்மால் தூக்கி எறிய முடியும். கடவுள், சமூகம், வாழ்வு என்ற மூன்று நிலைமையிலும் மனிதன், மனிதம், சமத்துவம், என்ற மூன்று தன்மைகளையும் பேணி தாம் தயாராக இருக்க வேண்டும்.

செய்வதற்கரிய சீரிய செயல்கள் ஏராளம் இருக்க, சிறுள்ளைகளும் செய்யாத செயல்களைச் செய்து, சமூகத்தைத் திசை திருப்ப முயல்வதா? ஒருபோதும் அனுமதிக்க முடியாது. நாம் என்ற எண்ணப் போக்கு பாகுபாடற்ற சமூக நல்லுறவை ஏற்படுத்தும் என்பதை நம் சமூகத்துக்கும் கண்டிப்பாக விளங்க வைக்க வேண்டிய முக்கிய கால நேரத்தில் இன்றைய சந்ததி இருக்கின்றது.

எனவே, யாம் எல்லோரும் “ஒன்றே குலம், ஒருவரே தேவர்” என்ற எண்ணப் பாட்டோடு அடுத்த தலைமுறைக்குச் சிறந்த சீரிய, ஆரோக்கியமான சிந்தனைகளையும், விடயங்களையும் விட்டுச் செல்ல முற்படுவோம். வேண்டாத விடயங்களை நினைத்து, முன்பு போல் மீண்டும் ஒரு வாழ்வியல் பிரச்சினையை ஏற்படுத்தாது தடுப்போம்.




# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்



ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**



# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**என்ரபாடு சச்சரவிலேயே போகுது பாருங்கோ. சச்சரவு எண்டால், ஏதோ குடும்பச் சச்சரவு எண்டு நினைச்சுப் போடாதேங்கோ. எல்லாம் ஊர்ச்சச்சரவுகள் தான் பாருங்கோ. எங்கயாவது பொதுவிடயங்களில குளறுபடி நடக்குது எண்டால் எனக்குச் சனம் சொல்லிப்போடும். அல்லது எழுதி அனுப்பி போடுங்கள் கண்டியளோ.**

அதுக்காக நான் ஏதோ வீரதீர நாயகன் எண்டு நினைச்சால் அது உங்கட பிழை. பொதுசனத்துக்குப் பிரச்சனை எண்டாலோ, அல்லது பொது இடத்தில ஏதாவது குளறுபடிகள் நடக்குது எண்டாலோ நான் அந்தப்பிரச்சனையை பொதுமக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து, பொதுமக்களாலேயே நீதி கிடைக்கப்பண்ணுறது மட்டும்தான் என்ர வேலை பாருங்கோ. அதாவது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கிற வேலை தான் நான் பாக்கிறது. மிச்சத்தைப் பாக்கிறது நீங்கள் தான் பாருங்கோ.

தமிழ்ப்பாட நூல்களில வரலாற்றுத் திரிபு இருக்குதெண்டு கிட்டடியில உங்களுக்குச் சொன்னனான் அல்லே. அது ஒட்டுமொத்தமா பொதுசனத்துக்குத் தெரியவந்து, உலகமெல்லாம் பரவீட்டுது. ஆனால் அதை மறைக்க ஒரு கூட்டம் ஓடித்திரியிறது தான் பெரும்பகிடி பாருங்கோ. அதுக்குப்பிறகு நடந்த கதைகளைக் கேட்டால், உங்களுக்குத் தலை வெடிச்சிரும் பாருங்கோ. அச்சடிச்ச புத்தகத்தில வரலாற்றுத் திரிபு எண்டால், அதை மாற்ற முடியாது பாருங்கோ.

உண்மையிலேயே தமிழரின்ர வரலாறு நேர்த்தியாக, உண்மையாக அமையவேணும் எண்டு உளப்பூர்வமாக விரும்பினால், அவ்வளவு புத்தகத்தையும்

மீளப்பெறவேணும். அல்லது, தமிழரின்ர வரலாறு பற்றி எங்களுக்குக் கவலையில்லை, காசு தான் எங்களுக்கு முக்கியம் எண்டு ஒத்துக்கொள்ளவேணும் கண்டியளோ. இது இரண்டுமில்லாமல், இரண்டுக்கும் நடுவால யேர்மனியில கதையொண்டு விட்டாங்கள் பாருங்கோ.

என்ன தெரியுமே...? அதாவது புத்தகத்தில பிழை இருக்குதெண்டு தங்களுக்குத் தெரியுமாம், அது ஒண்டும் பெரிய பிழை இல்லையாம், பிழை இருக்கிற பக்கங்களை மூடி ஒட்டிப்போட்டு தொடர்ந்து படிப்பிக்கப்போகினமாம். எனக்கு வாற விசருக்கு என்ன சொல்லுறதெண்டு விளங்கேல்லை பாருங்கோ. மூடி ஒட்டித்தான் இவங்கள் எல்லாத்தையும் செய்யுறாங்களோ எண்டு எனக்கு மனசுக்குள்ள ஒரு கேள்வி பாருங்கோ.

யாழ் நூலகத்தை எரிச்சது சிறிலங்கா அரச கைக்கூலிகளும், அவர்களுக்குப் பாதுகாப்பாக நின்ற காவல்துறையும் தான் பாருங்கோ. இதில யாழ் நூலகம் எரிந்தது எண்டு மட்டும் எழுதினால், படிக்கிற பிள்ளைக்கு யார் எரித்தது என்ற கேள்வி எழுமோ இல்லையோ? அப்படி எழும் கேள்விக்கு என்ன பதில் ? அடுத்தது பாருங்கோ் மாவீரர் துயிலுமில்லங்கள் எல்லாத்தையும் சிறிலங்கா இராணுவம் இடிச்சு அழிச்சுப் போட்டுது எண்டு எல்லாருக்கும் தெரியும் கண்டியளோ.

நினைவுகளும் வரலாறும் தான் ஓர் இனத்தின் எழுச்சியை மீளுருவாக்கம் செய்யும் எண்டது இந்த அடி முட்டாள்களுக்குத் தெரியேல்லை, ஆனால் சிங்களவன் அதை நல்லா உணர்ந்து வைச்சிருக்கிறான். அதனால தான் அவன் துயிலுமில்லங்களை அழிச்சவன். இந்தப் பாடநூல்களை எழுதின கசவாரக்கூட்டம் சிங்களவனுக்கு ஒரு படி மேல போய், “மாவீரர் துயிலுமில்லங்கள் இன்னும் தமிழீழத்தில தலைநிமிர்ந்து நிற்கிறது” எண்டு எழுதிவைச்சிருக்குது. சிங்களவன் அழிச்சதை மறைச்சு, சிங்கள அரசை ஏதோ கருணை பொங்கும் அரசாக உலகிற்குக்காட்டுவதற்கான முயற்சிதான் இது எண்டு வெட்டவெளிச்சமாத் தெரியுதோ இல்லையோ ?

கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகுதானாம் வன்னியிலே தமிழருக்குச் சார்பான அரசொன்று தோன்றியது எண்டு எழுதி வைச்சிருக்கிறாங்கள். அடேய் பிணந்தின்னியளே, அப்ப அதுக்கு முதல் இருந்த இயக்கர் நாகர் ஆரடா ? தமிழரின்ர பூர்வ குடிகளுக்கு அரசு இல்லை எண்டு உங்களுக்குக் கோத்தபாய சொல்லித் தந்தவரே? இனப்படு கொலையை



இனக்கலவரம் எண்டு எழுதி வைச்சுக் கிடக்கு, தமிழர்கள் இடம்பெயர்ந்தது அகப், புறச் சூழ்நிலைகள் காரணமாக எண்டு ஒரு வடை சுட்டிருக்கிறாங்கள் பாருங்கோ.

ஆத்தாடி எம்மாம் பெரிய வடை அது. இதைப்பார்த்தால் கோத்தபாயாவுக்கே மாரடைப்பு வந்திரும். ஏனெண்டால் அவன்ர வேலையை இவங்களல்லே செய்யுறாங்கள். தமிழினப் படுகொலை, வலிந்து காணாமலாக்குதல் காரணமாகத் தான் தமிழர்கள் தாய்நாட்டை விட்டு இடம்பெயர்ந்தார்கள் எண்டு எழுத வேண்டியது தானே. இனப்படுகொலை

எண்டு எழுத கை ஒருபக்கம் இழுக்குதோ, இல்லாட்டி அப்பிடி எழுதாத அளவுக்கு கத்தை கத்தையாக சிறிலங்கா அரசு காசு தந்தவங்களோ ?

இதுக்குள்ள பாருங்கோ, இவங்கள் செய்யுற கூத்துக்கெல்லாம் ஒத்தூதுறதுக்கு எண்டு ஒரு கூட்டம் வைச்சிருக்கிறாங்கள். ஐயோ! இவர்கள் எள் எண்டால் அவங்கள் சும்மா கெம்பி எழும்பி எண்ணையா நிப்பாங்கள் பாருங்கோ. ஈழத்தமிழரை வந்தேறு குடிகள் எண்டு பாடநூலில எழுதியிருக்கிறது சரியோ எண்டு ஒரு ஒத்தூதுற ஆசாமியிட்டக் கேட்டன்.




ஓம் நாங்கள் வந்தேறு குடிகள் தானே, தென்னிந்தியாவில இருந்துதான் வந்தனாங்கள் எண்டு ஆள் அடிச்சுது பாருங்கோ அடி, அம்மாடி உதுதான் கொரோனா - 4 ஆம் அலையோ எண்டு நினைக்கிற அளவுக்கு மூர்ச்சையாய்ப் போனன் கண்டியளோ. அதிலையும் இன்னொரு ஓத்தூதல் ஆசாமி வெகு அமோகம். புத்தகங்கள் பிழை எண்டுறது ஒருபக்கம் இருக்கட்டு, உவ்வளவு காசைச் செலவழிச்சு அடிச்சிருக்கிறாங்களே, அவங்களின்ர காசு பற்றிக் கவலைப் பட்டியளோ எண்டு ஆள் கேக்குது.

எட எருமையில போவானே, தகப்பனின்ர பெயரை மாத்திப்போட்டுத் தந்தால், பெயரைப்பாப்பியோ காசைப் பாப்பியோ எண்டு கேட்டன். அது வேற இது வேறயாம். என்ன மொழியில இவங்களுக்கு நான் விளப்படுத்த எண்டு தெரியேல்லை கண்டியளோ

இதுக்குள்ள இன்னொரு சிக்கலும் ஓடுது என்னெண்டால் பாருங்கோ, 15 வருடம் , 20 வருடம், 25 வருடம் எண்டு தொடர்ச்சியாக இவைக்கு ஒத்தூதுற ஆட்களுக்கு 2.99 யூரோ பெறுமதியான ஒரு பெரிய பலகை ஒண்டு குடுப்பினம். அதில அவையின்ர பெயரடிச்சு, அவையின்ர வீடுகளில சுவருக்குப் பாரமாக அது தொங்குற அளவுக்குச் செய்து கொடுப்பினம்.

இப்ப இஞ்ச என்ன சிக்கல் எண்டால், இப்ப 24 வருடமா ஒத்தூதி, வருகிற வருடம் 25 வருடத்தைத் தொட்டுச் சாதனை படைக்கப்போற நபர் ஒருவரிட்ட பாடநூல் வரலாற்றுத் திரிபு பற்றிச் பற்றிச் சொன்னன். அதுக்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமே ? நான் இன்னும் இருக்கப்போறது ஒரு வருடம் தானே, பிறகு விலகப்போறன் எண்டார். உண்மையா நீர் இதால தான் விலகப் போறீர் எண்டால் இப்பவே விலகலாமே எண்டு கேட்டன். ஆ ஊ எண்டு இழுத்தார்.

பிறகுதான் யோசிச்சுப் பிடிச்சன் என்னெண்டால், இந்த வருசத்ததோட விலகினால், 2.99 பலகை ஆளுக்குக் கிடையாதல்லே. என்ர தம்பிரானே, உந்தப்பலகை ஏதும் சந்தனக்கட்டையில செய்ததோ ? இல்லைத் தெரியாமக் கேக்கிறேன். அப்பிடி ஒரு பலகைக்காக கொள்கையை, இலட்சியத்தை, சுயத்தை இழந்து நிக்கிற அளவுக்கு மனம் கோணுமோ ? பலகையா வரலாறா எண்டு பட்டிமன்றம் வைச்சால், பலகை அணிதான் வெல்லும் எண்டுறதுதான் இப்போதைய நிலை பாருங்கோ.

தமிழீழத்தில நடந்தது இனப்படு கொலையா, இனக்கலவரமா எண்டு தெரியாத ஒரு சிங்கன், ஒரு பள்ளிக் கூடத்துக்கு அதிபதி. அவர் சொன்ன

விளக்கம் என்ன தெரியுமே? 1977 ஆம் ஆண்டு தாரப்பீப்பாய்க்குள்ள உயிரோட தமிழரைப் போட்டது இனக்கலவரமாம், தலையில நேரடியா குண்டு விழுந்து செத்தால் இனப்படுகொலையாம். எனக்கு வந்த கொதிக்கு, ஆளைப் பிடரி மயிரில பிடிச்சு, முழங்காலில இருத்தி விளங்கப் படுத்துவமோ எண்டு யோசிச்சன். அதுக்கு அப்பவும் உது விளங்காதாம் எண்டு அந்த நகரத்திலே இருக்குற ஆக்கள் சொல்லிச்சினம்.

இனிவரப்போற தலைமுறை படிக்கிற பாடநூலில பிரளயம் பண்ணிப் போட்டு, கூச்ச நாச்சமில்லாமல் தமிழீழத் தேசியக் கொடியை ஏந்திக்கொண்டு ஊர்வலம் போவாங்கள் பாருங்கோ, அப்பிடி ஒரு நாடகத்தை உலகத்தில எங்கையும் காணமாட்டியள். வரலாற்றைத் திரிபு படுத்தி வெளியிடப் பட்டிருக்கிற பாட நூல்களை மீளப் பெறாமல் தமிழ்த்தேசியம் பற்றிப் பேசுறவன் சிறிலங்கா அரசாங்கத்தின்ர கையாள் எண்டுறதில மாற்றுக் கருத்தில்லை கண்டியளோ.

இப்படியான பாடநூல்களை நீங்கள் உங்கட பிள்ளையளுக்குப் படிப்பிக்கிறதைத் தவிர்த்து, தமிழீழ வரலாறு, தேசியத்தலைவரின் சிந்தனைகள், தமிழீழப் போராட்ட வரலாறுகளை உங்கட பிள்ளையளுக்குச் சொல்லிகுடுங்கோ எண்டு எல்லாரட்டையும் தாழ்மையோடு கேட்டு கொள்ளுறன். கல்லெறி இதுவரைக்கும் உங்களிட்ட கையேந்தி எதையும் கேட்டதில்லை. முதன்முறையா கேக்கிறன், ஏற்றுக்கொள்ளுவியள் எண்டு நினைக்கிறன்.

**"சிந்தித்து பார்த்து**
**செய்கையை மாற்று**
**சிறுசாய் இருக்கையில்**
**திருத்திக்கோ**
**தவறு சிறுசாய் இருக்கையில்**
**திருத்திக்கோ..**
**தெரிஞ்சும் தெரியாம**
**நடந்திருந்தா - அது**
**திரும்பவும் வராம பார்த்துக்கோ"**

**அப்ப வரட்டே**






கண்ணன்

# முற்றுமுழுதாகக் கவிழும் பொருளாதார நிலையில் இலங்கை

**‘கிழக்காசியாவின் அற்புதம்’ என அழைக்கப்படும் புதிய கைத்தொழில் மய நாடுகளும், 'பிரிக்ஸ்' (BRICS) என அழைக்கப்படும் எழுச்சி பெற்று வரும் நாடுகளும் தமது பொருளாதார அடைவுகளைத் திறந்த பொருளாதாரத்தின் ஊடாகவே அடைந்து கொண்டன. மாறாக குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுவது போல, உள்நாட்டுச் சந்தைகளை நம்பி அவை செயற்படவில்லை. ஆனால், இலங்கையின் நிலையே தலைகீழாக இருக்கிறது**

2005இன் பின்னர் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையிலான திட்டங்களே முன்னுரிமைத் திட்டங்களாக இருந்தன. மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் பெரும்பகுதி உள்ளூர் பொருளாதார நடவடிக்கைகளை மையப்படுத்தியதாக இருந்தது. விமான நிலையம், துறைமுகம் அதிவேக நெடுஞ்சாலைகள் போன்றன அமைப்பதற்கு வழங்கப்பட்ட முன்னுரிமைகள் ஏற்றுமதித் துறைக்கு வழங்கப் படவில்லை. வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஏற்றுமதி சார் துறைகளில் ஊக்குவிக்க போதியளவு முனைப்புகள் மேற்கொள்ளப் படவில்லை.

2020 ஆம் ஆண்டின் வணிகப் பற்றாக்குறை 2019 ஒக்தோபர் மாத இறுதியில் 6.45 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2020 ஒக்தோபர் மாத இறுதியில் 4.85 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் பத்து மாதங்களில் இந்த அமெரிக்க டொலர் 1.6 பில்லியன் வணிக பற்றாக்குறை குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், சமநிலை சுற்றுலா வருவாய் பெரும் சரிவு மற்றும் மூலதனத்தின் நிகர வெளியேற்றம் காரணமாக 2020 October மாத இறுதியில் கொடுப்பனவு

பற்றாக்குறை 2.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக விரிவடைந்தது.

இவற்றால் வர்த்தக பற்றாக்குறை குறுகினாலும், கொடுப்பனவுகளின் இருப்பு விரிவடைந்தது. அடுத்த ஆண்டு நாட்டின் கடன் திருப்பிச் செலுத்தும் பொறுப்புத் தொடர்பாக வெளிநாட்டு செலாவணி இருப்புக்கள் **(External financial reserves)** கடுமையாகச் சரிந்துள்ளது.

2019 ஆம் ஆண்டின் கொடுப்பனவுகளின் சமநிலை 377 மில்லியன் அமெரிக்க டொலர் உபரியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டின் கொடுப்பனவு இருப்பு அமெரிக்க டொலர் 2 முதல் 2.5 பில்லியன் வரை பற்றாக் குறையைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு கொடுப்பனவு சமநிலையில் ஏற்பட்ட சரிவு நாட்டின் பொருளாதாரத்திற்குக் கடுமையான அச்சுறுத்தலாக இருக்கின்றது. ஏனெனில் வெளிநாட்டு செலாவணி இருப்புக்கள் ஒரு நெருக்கடியான நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் முக்கியமான சிக்கல் இலங்கை வெளிநாட்டுக் கடனை கொடுக்குமதிகளைக் குறித்த கால எல்லைக்குள் கொடுக்கமுடியவில்லை என்பதுதான். இலங்கையின் 72 ஆண்டு வரலாற்றில் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் தவற விட்டது கிடையாது.

2021 ஆம் ஆண்டில் கடன் கொடுக்குமதி 4.5 பில்லியன் அமெரிக்க டொலராகவும் 2021-24 ஆம் ஆண்டில் சுமார் 23 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. கொடுப்பனவு சமநிலையின் பலவீனமான போக்கு தொடருமானால், இந்த கடன்களைத் திருப்பிச் செலுத்துதலுக்கான வல்லமை கேள்விக் குறியாக மாறக் கூடும்.

2020 - 2026 ஆண்டுகளில் நாட்டின் வெளிநாட்டுக் கடன் மிகப்பெரிய நெருக்கடிக்கு உள்ளாகப் போகின்றது. பல நிதி முதலீட்டு நிறுவனங்கள், இலங்கையின் வெளிநாட்டுக் கடனை இலங்கை திருப்பி செலுத்துவதற்கான ஆற்றல் அதற்கு போதுமானதாக இல்லை என நினைக்கின்றன. இதனால் இலங்கையின் கடன் மதிப்பீட்டை குறைத்து மதிப்பீடு செய்துள்ளன. இதனால் இலங்கை சர்வதேச மட்டத்தில் கடன் வாங்குவது வில்லங்கமாக இருக்கப் போகிறது.

இலங்கை இந்த ஆண்டு (2021) 4.8 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனை அடைக்க வேண்டியுள்ளது. கடன் மட்டுமே மொத்தமாக 35 பில்லியன் அமெரிக்க டொலர் ஆக இருக்கிறது.



கடனுக்கு மேல் கடனை வாங்கி வந்த இலங்கை, அந்தக் கடனை அடைக்க வழி தெரியாது நிற்கிறது. நாட்டின் ஏற்றுமதி மற்றும் சுற்றுலா வருவாய் மோசமாக பாதிக்கப் பட்டுள்ளதால், வெளிநாட்டு நாணய கையிருப்புக்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. இந்த ஆண்டு ஒக்தோபர் மாத



இறுதியில், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச இறையாண்மை பத்திரத்தை **(ISB)** திருப்பிச் செலுத்திய பின்னர், வெளிநாட்டு நாணய கையிருப்பு 5.9 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சி கண்டது. நவம்பர் மாத இறுதியில் அவை 4.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. கணிசமான மூலதன வரவுகள் இல்லாவிட்டால், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இது நான்கு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாக இருக்கப் போகிறது.

பொதுவான விதி வெளிநாட்டு நாணய கையிருப்பு 3 மாத இறக்குமதிக் கொடுப்பனவுக்குச் சமானமாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் இந்த வெளிநாட்டு நாணய கையிருப்பு அமெரிக்க டொலர் சராசரி 7.5 பில்லியனாக இருந்தது. ஆனால் இலங்கை மேற்கொண்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டுகள் காரணமாக அதன் இறக்குதி குறைந்து காணப்படுகிறது. (இது 2020 நிலையாகும்)

***Covid*** நோய்க்கு முன்னர் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பொருளாதாரம் நேர்மறையான இரண்டு விகிதம் மட்டுமே வளர்ந்தது. ஆனால், இரண்டாவது காலாண்டில் வளர்ச்சி விகிதம், 16.3 விகித எதிர்மறை வளர்ச்சியாகக் குறைந்து விட்டது. மூன்றாம் காலாண்டில் 1.5 விகித வளர்ச்சியை அடைந்தது. ஆனால், கொரோனாவின் இரண்டாவது அலை காரணமாக பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இதனால் நான்காவது காலாண்டின் வளர்ச்சியும் எதிர்மறையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொலைத் தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், சில்லறை வணிகம், உள்ளூர் வேளாண்மை ஆகிய துறைகளினாலேயே நாடு தற்போது காப்பாற்றப்பட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.1 விகிதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. ஆனால், அதைக்கூட இலங்கையால் எட்டமுடியவில்லை

முடிவடையும் ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, இது உலகளவில் மற்றும் இலங்கைக்கு மோசமான ஒன்றாகும். சீர்குலைந்த உலகப் பொருளாதாரம் சுருங்கிய தீவின் வர்த்தக சார்பு பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.

உற்பத்தி வீழ்ச்சி தோராயமாக 8,90,000 பேரை புதிய ஏழைகளாக மாற்றியுள்ளது. அவர்களில் பலர் இலங்கையின் ஏழ்மையான பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இது ஒரு குறிப்பிடத்தக்க பின்னடைவு ஆகும்,

மூலம் : **Advocata** ஆங்கில இணையம்



top up | prices | My L-mobile | International

# L-mobi mobile

| Bundle | Details | Price |
|---|---|---|
| 100MB | 50MB + 50MB Gratis | €1 |
| 256MB | 128MB + 128MB Gratis | €2 |
| 512MB | 256MB + 256MB Gratis | €3 |
| 1GB | 512MB + 512MB Gratis | €4 |
| 2GB | 1GB + 1GB Gratis | €5 |
| 3GB | 1.5GB + 1.5GB Gratis | €6 |
| 4GB | 2GB + 2GB Gratis | €6,50 |
| 5GB | 2.5GB + 2.5GB Gratis | €7 |
| 6GB | 3GB + 3GB Gratis | €7,50 |
| 7GB | 3.5GB + 3.5GB Gratis | €8 |
| 8GB | 4GB + 4GB Gratis | €8,50 |
| 10GB | 5GB + 5GB Gratis | €9 |
| 12GB | 6GB + 6GB Gratis | €11 |
| 15GB | 7.5GB + 7.5GB Gratis | €13 |

Maandelijks opzegbaar
Geen aansluitkosten
Geen BKR controle

L-mobi mobile prepaid SIM ONLY — gratis simkaart
L-mobi mobile prepaid SIM ONLY — maand bundel
L-mobi mobile prepaid SIM ONLY — jaar bundel

Action! get 2= pay 1
With an annual bundle
worth 24.95
Get the 2nd SIM card for

**FREE!**

# A whole year for a fixed price!

**Reliable, affordable, accessible. For everyone.**



+31 20 363 62 31
cs@l-mobi.nl

Website : www.l-mobimobile.nl

Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam

*Available at*

JUMBO | coop

AKO | recharge.com | SENIORSTORE.NL | bp | OPWAARDEREN.NL | BELTEGOED.NL

Phone House | Primera | telecombinatie | BCC | OPTIE 1 Smart Living | SPAR

MCD mijn supermarkt

சண் தவராஜா

# வழி காட்டுமா வழிபாட்டுத் தலங்கள்?



கொரோனாப் பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக உலகமே ஸ்தம்பித்து நிற்கின்ற நிலையிலும், புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஆலயங்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் பெருமளவில் கூடிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. அரசாங்கங்கள் விதித்துள்ள நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்காமல் போவது ஒருபுறம் இருக்க, சொந்த ஆரோக்கியத்தில் கூட அக்கறை அற்றவர்களாக அவர்கள் செயற்படுவதைப் பார்க்கும் வேளைகளில் வேதனை அதிகரிக்கின்றது.

தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் பாதிக்கும் வகையிலான இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் மக்கள் - அறிந்தோ, அறியாமலோ - தாம் வாழும் சமூகத்திலும் தொற்றுப் பரவலுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றனர். பல்வேறு இழப்புகளையும், விமர்சனங்களையும் எதிர்கொள்ளும் அரசாங்கம் தடைப்படுத்த நினைக்கும் தொற்றுச் சங்கிலிக்கு முட்டுக்கட்டை போடுபவர்களாக இவர்கள் மாறி விடுகின்றனர்.

புலம்பெயர் தமிழ் மக்கள் மாத்திரமன்றி, தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் கூட அரச உத்தரவுகள், கட்டுப்பாடுகளை மதிக்காத போக்கு நிலவுவதைச் செய்திகள் வாயிலாக அறிய முடிகின்றது. திருத்திக் கொள்ளப்பட வேண்டிய இந்தப் போக்கு தொடர்பில் யார் வழிகாட்டுதல்களை வழங்குவது? என்ற கேள்வி எழுகின்றது.

சமூகங்களைப் பொறுத்தவரை அரசாங்கத்தைத் தவிர்த்து, அந்த மக்கள் மத்தியில் செயற்படும் சமூக நிறுவனங்களே மக்களை வழிநடத்த வல்லவையாக உள்ளன. அந்த வரிசையில் மத நிறுவனங்களுக்கு முக்கிய பொறுப்பு உள்ளது. மத நிறுவனங்கள் தனியே வழிபாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவனவாக மட்டுமன்றி, மக்களை வழி நடத்துவனவாகவும் விளங்க வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகவும் உள்ளது. அத்தகைய எதிர்பார்ப்புடன் கூடிய புரிதல்கள் காரணமாகவே

மதத் தலைவர்களும் சமூகத்தின் மதிப்பைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

மதத் தலைவர்கள் மீதான இத்தகைய எதிர்பார்ப்பு, புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரை பல மடங்கு அதிகமாகவே உள்ளது. மாறுபட்ட கலாசாரச் சூழல், வேற்று மொழி, அந்நிய தேசம், வழிகாட்ட மூத்த குடிமக்கள் அருகில் இல்லாத நிலைமை எனப் பல விடயங்கள் மக்களைத் தடுமாறச் செய்யும் சூழலில், மக்களின் தேவைகளை, உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு முறையான வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் வழங்கும் கடப்பாடு மத குருமாருக்கு உள்ளது.

ஆனால், வெகு சிலரைத் தவிர, மத குருமார்கள் இதில் கவனம் செலுத்தாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்து மத குருமாரின் அலட்சியம் இது விடயத்தில் தெளிவாக அவதானிக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. பணம் பண்ணுவதில் அவர்கள் காட்டும் சிரத்தையை வேறு விடயங்களில் காட்டுவதில்லை என்ற விமர்சனம் பொதுவாகவே உள்ளதை அனைவரும் அறிவர்.

படாடோபமான திருமணச் சடங்குகளை முன்னின்று நடத்தும் அவர்கள், குடும்பங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதிலோ, முறையான வழிகாட்டுதல்களை வழங்குவதிலோ அக்கறை கொள்வதில்லை. மத குருமாரில் பலருக்கும் இத்தகைய விடயங்களில் தலையிட்டு, ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கக் கூடிய திறன் இல்லை என்பது ஒருபுறம் இருந்தாலும், அது விடயத்தில் அக்கறை இல்லாமல் இருப்பதே கவலைக்குரியதாக உள்ளது.



பிறக்கும் போதே எவரும் தலைவர்களாகப் பிறப்பதில்லை. அவர்கள் வாழும் சூழலும், அவர்களின் அறிவும், திறமையும் அவர்களுக்குக் கிட்டும் வாய்ப்புகளுமே அவர்களைத் தலைவர்களாக மாற்றுகின்றன. ஆனால், மத குருமாரைப் பொறுத்தவரை நிலைமை அவ்வரில்லை. இன்னமும் கூடப் பிறப்பின் அடிப்படையில் மத குருமாராக விளங்கும் நிலைமையே இந்து மதத்தில் அதிகமாக உள்ளது. ஆகவே, காலச் சூழல் காரணமாக மற்றவர்களுக்கு வழிகாட்டும் இடத்தில் உள்ள அத்தகையோர் பொறுப்புணர்வுடன் தமது கடைமையைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

மனிதர்களைப் பொறுத்தவரை கொண்டாட்டங்கள் அவசியமானவையே. ஆனால், கால, தேச, வர்த்தமான நிலைமைகளை அனுசரித்தே அவை நடாத்தப்பட வேண்டும். அது ஆலய விழாவாயினும், களியாட்ட விழாவாயினும் நடைமுறை ஒன்றாகவே இருக்க முடியும். மனிதர்களுக்காகவே, அவர்களின் மன மகிழ்ச்சிக்காகவே கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இன்றைய பெருந் தொற்றுக் காலத்தில் கொண்டாட்டங்களை நடத்துவது என்பது உயிரைப் பணயம் வைக்கும் ஒரு செயல் என்பதை மத குருமாரும், மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.

இது விடயத்தில் புலம்பெயர் மக்கள் மத்தியில் செயற்பட்டுவரும் ஊடகங்களும் கூட எதுவித அக்கறையும் அற்றவையாகவே உள்ளமையை அவதானிக்க முடிகின்றது. ஊடக அறம் என்றால் என்ன? எனத் தெரியாத பலரும் ஊடகங்களை நடத்துபவர்களாகவும், ஊடகவியலாளர்களாகவும் செயற்பட்டு வருகின்றார்கள் என்பது ஒரு கசப்பான உண்மையே.

ஆயினும், தங்களதும், தாம் சார்ந்தவர்களதும் நலன் கருதியேனும் அவர்கள் இது விடயத்தில் பேச வேண்டியது அவசியமாகின்றது. தாயகத்தில் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சிரமங்களின் மத்தியில் ஊடகப் பணியாற்றிய பல ஊடக முன்னோடிகள் இன்று புலம்பெயர் நாடுகளில் வசித்து வருகின்றார்கள். இன்றைய ஊடக உலகம் தொடர்பில் வெறுப்படைந்த நிலையில் உள்ள அவர்கள் இந்த வேளையிலாவது தங்கள் மௌனத்தைக் கலைப்பது நல்லது.



“மக்கள் தீட்டப்படாத வெண் காகிதங்கள்” என்பது பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை கார்ல் மார்க்சின் கருத்து. வெண் காகிதத்தில் எதை வரைய வேண்டும் என்பது சமூகத்தின் வழிகாட்டிகளின் கரங்களிலேயே உள்ளது. காகிதத்தில் வரையும் விடயத்தைப் பொறுத்தே அது எங்கே இடம்பெற வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், ஆலய விழாக்களில் கலந்து கொள்வதன் ஊடாகத் தங்கள் உயிரைப் பணயம் வைக்க வேண்டுமா? இல்லையா? என்ற வழிகாட்டலை வழங்கும் பொறுப்பு மத குருமாரின் கரங்களிலேயே பெரிதும் தங்கி உள்ளது என்றால் மிகையில்லை.



யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2021ஆம் ஆண்டின் தீபாவளியை முன்னிட்டு
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44 Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் (பிரான்சு) உறுதிகுலையாத செயற்பாடுகள் தொடரும்

உலகெங்கும் வாழுகின்ற தமிழ்ச் சந்ததியின் கல்வியைச் சிதைக்கும் நோக்கோடு, சிறிலங்கா அரச பயங்கரவாதப் பின்புலத்துடன் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட *ICEDT* (அனைத்துலகத் தமிழர் கல்விப்பேரவை) என்ற அமைப்பினால் 05.06.2021 அன்று, உலகெங்கும் அறிமுகம் செய்யப்பட்ட திடீர் பாட நூல்களில் தமிழர் வரலாறு திரிபுபடுத்தப் பட்டிருப்பது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

எனவே பிரான்சு நாட்டைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் தமிழர் கல்விப் பேரவை இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சந்ததிக்கான தமிழ்க் கல்வியை வழமை போலவே உறுதியுடன் தாம் வழிநடத்தப் போவதாகவும், தமது செயற்பாடுகள் பற்றி குழப்பகரமான செய்திகளைப் பரப்புபவர்கள் பற்றி, ஈழத்தமிழர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கல்விப்பேரவை தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ்ப் பெற்றோர்களின் பிள்ளைகள் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற போதும், கல்லெறிபட்ட கூட்டுப் பறவைகள் போல் அவர்களின் வாழ்வியல் முறை சிதறிவிடாமல், தாய் மொழிக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு, தங்கள் அடையாளத்தைக் காக்கவேண்டும். தங்கள் வேரை அறிய வேண்டும், புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழினம் ஒரு குடையின் கீழ் நிற்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக தேசியத் தலைவர் அவர்களால் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை 2004 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது.

இவ்வமைப்பு 14 நாடுகளுக்கு அதாவது பிரான்சு, பிரித்தானியா, யேர்மன், பெல்சியம், நோர்வே, டென்மார்க், இத்தாலி, நெதர்லாந்து, சுவீடன், அவுத்திரேலியா, நியூசிலாந்து, கனடா, பின்லாந்து, மொரிசியசு ஆகிய நாடுகளுக்கு வளர்தமிழ் பாடநூல்களை வழங்குகின்றது. எமது வளர் தமிழ்ப் பாடநூல்களில் இலக்கியம், இலக்கணம், வரலாறு உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பாடநூல்களாகவும், பயிற்சி நூல்களாகவும் மொத்தம் 25 நூல்களும் துணை நூல்களாக வாசித்தல் நூல்கள் : மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்ப்பதற்குரிய நூல்களாகவும் 1 - 4 வரை, 5 - 8 வரை, 9 - 12 வரை மாணவர்களின் பேச்சுத் திறனைத் தூண்டும் வகையில் படங்களை உள்ளடக்கிய கட்புல நூலும், இலக்கணத்தை விரும்பிக் கற்க கற்றல் வள இலக்கண நூல்களும், பட்டயக் கல்வி நூல்கள் என பலவாக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் 46 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.



இவற்றின் பாடத்திட்ட ஒழுங்கமைப்பு வாழிட நாட்டின் பள்ளிகளின் பொதுக்கல்வித் திட்டத்தோடு இணைந்து செல்கிறது. இப்பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் மொழி கற்பதோடு மட்டுமன்றித் தமிழர்களின் கலை, பண்பாடு, வாழ்வியல் ஆகியவற்றையும் கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தேர்வுகளும் சிறப்பாக ஒழுங்கமைக்கப் பட்டு நடைபெறுகிறது.

அரையாண்டுத்தேர்வு : மாதிரி வினாத்தாள் ஒவ்வொரு ஆண்டும் ***January*** இல் வருகின்ற இறுதிச் சனிக்கிழமை நடைபெறுகிறது. பொதுத்தேர்வு : ***June*** மாதத்தில் வருகின்ற முதற் சனிக்கிழமை நடைபெறுகிறது. புலன்மொழித்தேர்வு : ***June*** இரண்டாம் மூன்றாம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

அத்தோடு தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கானச் சான்றிதழ்கள் அனைத்தும் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் அந்தந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆண்டு 12 நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு, வெளிவாரி மாணவர்களுக்கான பொதுத்தேர்வு, ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு ஆகியன தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

தேர்வுகள், தமிழ்த்திறன் போட்டிகள் நடைபெறாது என்றும், சான்றிதழ்கள் வழங்கப்படாது என்றும் குழப்பவாதிகளால் பரப்பப்படும், செய்திகள் தொடர்பாக உறவுகள் அச்சமடையத் தேவையில்லை. குறிப்பாக யேர்மனியில் வாழும் தமிழ்மக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டுமென்றும், தமிழ்க்கல்விப் பேரவை (பிரான்சு) அமைப்பின் வழிநடத்தலில் தொடர்ந்து இயங்கும் பாடசாலைகளுக்கான தொடர்பகம் NRW மாநிலத்தில் விரைவில் அமைய விருக்கிறது எனவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மேலதிக விவரங்களுக்கு திரு. வலன்ரைன் அவர்களை (0163 3590849) தொடர்பு கொண்டு அறியமுடியும்.


**Dortmund மாநகரில்....**

**தமிழர் அரங்கம் கல்விக் கூடம்**




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்

"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### அறிமுகம்!..

கொரோனாவின் கோரப்பிடியில்
மரச்சவப் பெட்டிகளுக்குத் தட்டுப்பாடு
காட்போட் பெட்டிகளின் புதுவரவு
மனிதரை எரிக்க.. அறிமுகமானது!..



### நிம்மதி!..

அன்று குறைந்த வருமானம்
நிறைந்த நல்ல நிம்மதி
இன்று நிறைந்த வருமானம்
குறைந்து போய்விட்டது நிம்மதி!..

### தேடுவார் இல்லை!..

தேடுவாரற்றுக் கிடக்கிறது
உயரத்தில் ஏற்றிவிட்ட
ஏணி மட்டுமல்ல
கல்வி தந்த ஆசானும்!..

**வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி**



### பிள்ளை

நீ விரும்பும்
திசையில்
பறக்கவில்லை
என்பதற்காக
உன் குழந்தையின்
சிறகை நறுக்காதே

### அம்மா...

பிள்ளைகள் பசியறிந்து
ஈரவிறகை எரியவைக்கும்
மந்திரம் தெரிந்த உயிர்
அம்மா...

### சமூகம்

அதிக பட்சமாக
பெண்களை
நல்ல தாய்
மனைவி என
அவளின் சுயம்
தொலைத்தால் மட்டுமே
போற்றி புகழ்கிறது
இந்த சமூகம்

### வாழ்க்கை

உன் வாழ்க்கை
நன்றென இருப்பதற்கு
அடுத்தவர் அறிவுரை எதற்கு
நீ எடுக்கும் முடிவு
சரி என்பதே போதும்...

**பாமினி, பேர்லின்**



# அகர கவிக்களம்....



## முக்கியம்...

முயற்சிகள்
முக்கியம் தான்.....
ஆனால்
முயற்சிகளை
எங்கு செலுத்த
வேண்டும்.....
என்று
தெரிந்து கொள்வது
அதைவிட
முக்கியம்.

## பயணம்....

களத்தில்
பலவிதமான
திசைகள் உண்டு...
நாம் எந்த திசையில்
பயணிக்கிறோம்
என்பதை விட...
எந்த திசை
சரியானது என்று
பயணிப்பது தான்
சிறந்தது.



**அபி, இத்தாலி**

## வாழ்க்கை

எதுவுமே இங்கு நிரந்தரமல்ல
எதுவுமே இங்கு உனதல்ல
நீ உணர்வாய் ஒரு நிஜமான
மனநிறைவான உண்மையை
அமைதிக்கான வழியும்
உனக்கு
அன்றுதான் கிடைக்கும்.

**நந்தினி, இலண்டன்**



## உடையும் ஒரு நாள்

நீதி என்னும் போர்வையில்
லஞ்சம் கொடுப்பவன்
வெல்வான்
கொடாதவன் தோற்பான்
அநீதி ஆங்கே வெல்லும்.

மார்தட்டிப் புகழ் பாடுவோர்
அறிவாளிகள் என்பார்
அறிவங்கே
கிஞ்சித்தும் கிடையா
உறியில் ஏறி நிற்பார்.

உறியில் வைத்த பானை
உடையும் ஒரு நாள்
இவரும் உடைந்து
சுக்கு நூறாவர் ஒரு நாள்.

புகழ் புகழ்
தன்னையே சமூகம் புகழ
வேண்டுமெனச்(சில)
சுயநலவிரும்பி
புகழாதாரை மறுபுறம்
திரும்பி வசைபாடும்
வல்லினக் கூட்டம்

## கல்கி

காடழியும், நாடழியும்,
வெள்ளம் பெருகும்,
இயற்கையின் சீற்றம்
எல்லாமே அழியும்.
கொரோனாவும் அழிக்கும்
குமுகம் என்ன செய்யும்.
மாற்றம் கண்டதா
மனிதர் மாறினாரா.
இல்லை இன்னும்
பணம் தேடியபடி
சீர் குலைந்த படி

**கெங்கா ஸ்ரான்லி**

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

பாகம் – 19



புலிகள் இயக்கம் என்பது ஒரு சிக்கலான அமைப்பு. புலிகளால் எவ்வாறு உலகம் வியக்கும் பல வெற்றிகளைப் பெறமுடிந்தது? என்பதற்கு ஒரே ஒரு காரணத்தை மட்டும் கூற முடியாது. சிக்கலான அமைப்புகளின் தன்மை அப்படி. புலிப்பண்பாடு, உத்திகள், பரிணாமம், தலைமை என பல்வேறு காரணிகளின் கூட்டு செயல்பாட்டின் விளைவாகவே புலிகள் வெற்றிகரமான இயக்கமாக உருவானார்கள். அவ்வாறான காரணிகளில் நம்பிக்கை என்பது இன்னொரு முக்கிய காரணி.

# நம்பிக்கை இல்லாமல் தேசம் இல்லை

இவ்வுலகின் ஒரு தன்மை என்னவென்றால், அது எவ்வாறு பரிணமிக்கும் என்பது முன்கூட்டியே தீர்மானிக்க முடியாதபடி சிக்கலானது, எண்ணற்ற காரணிகளை உள்ளடக்கியது. நாம் விரும்பும் எதிர்காலத்தை உறுதியாக 100% அடையும் திட்டம் என்பது யாரிடமும் இல்லை, யாராலும் உருவாக்கவும் முடியாது. அவ்வாறு இருக்கும் பொழுது நாம் விரும்பும் எதிர்காலத்தை அடைய துணிவுடன் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அணுக முடியும்.

இவ்வுலகம் நம்பிக்கை கொண்டோர்களுக்கு மட்டுமே!. எவ்வாறு எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லாத மனிதர்கள் தற்கொலை செய்து அழிந்து போகிறார்களோ, அதுபோல நம்பிக்கை இல்லாத நாடுகளும், இயக்கங்களும் காலப்போக்கில் அழிந்து போகின்றன.

புலிகளின் அசுரபலத்திற்கு ஒரு முக்கிய காரணம் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. உதாரணமாக இந்தியா படைகளைக் கொண்டு மிரட்டிய பொழுது, இலங்கை அடிபணிந்தது, மற்ற தமிழ் போராட்டக் குழுக்களும் அடிபணித்தன. ஆனால், புலிகள் நம்பிக்கையுடன் எதிர்கொண்டு வெற்றி கண்டார்கள். களத்தில் போராளிகள் விழ விழ, அடுத்து வந்த போராளிகள் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். உலகிலே வேறு எந்த இயக்கமோ அல்லது எந்த மதமோ புலிகளைப் போல விடாப்பிடியான நம்பிக்கையை, மன உறுதியை கொண்டிருப்பார்களா என்பது ஐயமே!. அவர்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கும் ஒரு வாசகம் உண்டென்றால் அது கவிஞர் காசி ஆனந்தனின் வரிகள்தான்:

“நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்”

இறுதிப் போரில் உலகமே ஒன்று திரண்டு எதிர்த்த பொழுதும், புலிகள் இறுதிவரை மிகத் தெளிவாக நம்பிக்கையுடனே எதிர்கொண்டார்கள். அவர்களுக்கு இறுதிப்போரின் முடிவில் இரு தெரிவுகள் மட்டுமே இருந்தன. ஒன்று சரணடைவது அல்லது இறுதிவரைப் போராடி வீரமரணம் அடைவது. புலிகளின் வரலாற்றை அறிந்தவர்களுக்கு புலிகள் எதைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பது வியப்பானது இல்லை. எந்த முடிவு எதிர்கால மக்களிடம் விடுதலைக்கான கனவினை நம்பிக்கையை விதைக்குமோ, அதுவே சிறந்த தெரிவு. அதைத்தான் செய்தார்கள்.

இன்று எதிரிகள் கொக்கரிக்கலாம், ஆனால் இது தாற்காலிகமே!. வரலாற்றில் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. உதாரணமாக தெர்மாப்பிளைப் போரையும், மசாதாவையும் எடுத்துக் கொள்ளலாம். இரண்டாயிர வருடங்கள் முன்பாக நடந்த இந்நிகழ்வுகள், இன்றும் மக்களின் நினைவுகளில் இருந்து இயக்குகிறது என்றால், புலிகளின் முள்ளிவாய்க்காலும் , நந்திக்கடலும் அதுபோன்ற தாக்கத்தையே தமிழ்ச்சமூகத்தில் ஏற்படுத்தும். புலிகளின் நம்பிக்கை ஒரு நாள் வென்றே தீரும்.

நம்பிக்கையைப் பற்றி ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். வெறும் நம்பிக்கை மட்டும் என்றால் அது குருட்டு நம்பிக்கை. அதுபோன்ற நம்பிக்கைகள் சமூகத்தில் அநீதியை உருவாக்கி மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தும். மத நம்பிக்கைகள் அதுபோன்ற குருட்டு நம்பிக்கைகளே. நம்பிக்கையுடன் பகுத்தறிந்த செயல்பாடுகளும் இணையும் பொழுதே சமூகத்தில் நீதி நிலவும் என்கிறார் தத்துவமேதை பிளேட்டோ. நம்பிக்கை மட்டுமோ அல்லது பகுத்தறிவு மட்டுமோ இருந்தால், அது தனிமனிதனுக்கும் சரி, சமூகத்திற்கும் சரி அநீதியை உருவாக்கும்.



இன்றைய திராவிட கட்சிகள் தங்களது உண்மையான குறிக்கோள்களின் மீது நம்பிக்கையை இழந்ததால்தான் இன்று அது திசை தடுமாறி, சமூகத்தில் பல அநீதிகளை உருவாக்கி இருக்கிறது, சமூகத்தில் தனிமனித சுயநலம் தலைவிரித்தாடுகிறது. புலிகள் பகுத்தறிவையும், நம்பிக்கையையும் இணைத்து செயல்பட்டதால்தான் அவர்களால் ஒரே குறிக்கோளுடன் திசைமாறாமல் பல வெற்றிகளைப் பெற முடிந்தது. வெறும் நம்பிக்கையை மட்டும் கொண்டு வெற்றிகளைப் பெற்றிருக்க முடியாது.

அவர்கள் உத்திகளிலும் திட்டமிட்ட செயல்பாடுகளிலும் முன்னோடிகளாக இருந்தார்கள் என்று முந்தைய கட்டுரைகளில் ஏற்கனவே பார்த்தோம். அவர்கள் அமைத்த ஈழநாடு செல்வத்தில் குறைந்திருந்தாலும், பிளேட்டோ கூறியபடி நீதியில் நிறைந்திருந்தது. பெரியார் எதுபோன்ற நாடு அமையவேண்டும் என்று நினைத்தாரோ, அதை புலிகள் நிறைவேற்றிக் காட்டினர் என்பதை உண்மையான பகுத்தறிவு இயக்கப் பற்றாளர்களும் ஒப்புக்கொள்வார்கள்.

2009-க்குப் பின்னரான ஈழ விடுதலை சார்ந்த செயல்பாடுகள் குறிப்பிடப்படும் படியாக இல்லை. கடந்த பத்தாண்டு செயல்பாடுகள் விரல்விட்டு என்னும் நிலையிலேயே இருக்கிறது. இதற்கு ஒரு காரணமாக சிலர் கருதுவது என்னவென்றால், நம்மிடம் ஒரு தோல்வி / விரக்தி மனநிலை குடிகொண்டுள்ளது. இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. ஆனால், புலிகள் இருந்த பொழுது எவ்வளவு நம்பிக்கை இருந்ததோ, அந்த நம்பிக்கை இப்பொழுது இல்லை என்று உறுதியாகக் கூறலாம். அதுபோன்ற மனநிலை இயற்கையானது என்று நியாயப்படுத்தினாலும், அதிலிருந்து விடுபடாமல் நாம் ஈழம் சார்ந்த அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுப்பது என்பது கடினமான காரியமே!.

புலிகள் இல்லாத இன்றைய காலத்தில், நமது செயல்பாடுகளை முடுக்க அதிக ஊக்கமும், நம்பிக்கையும் தேவை. அதுபோன்ற நம்பிக்கையை எப்படி உருவாக்குவது? இது முடியாத காரியமல்ல. வரலாற்றில் மற்ற இனங்கள் எவ்வாறு பெரிய பின்னடைவுகளில் இருந்து உளவியல் ரீதியாக மீண்டு வெற்றி கொண்டனர் என்பதனை அறிவதன் மூலம், நாம் நமக்கான ஒரு பாதையை உருவாக்க முடியும். இதற்கு வரலாற்றில் ஒரு சிறந்த உதாரணம் என்றால் யூதர்கள்தான்.




CENTURY
TRAVELS GMBH
Rheinische Strasse 29
44137 Dortmund
15
YEARS OF SERVICE
Frankfurt
to Colombo
ab669€
40kgs
Qatar Airways
Hotel ( Level 1 Certified )
Corona schutz ( Insurance)
Transfer to Hotel
PCR -Test
ETA Visa
இலங்கையின் எந்தப் பகுதிக்கும்
வாகன வசதி செய்து தரப்படும்.
QATAR
அனைத்து வசதிகளுடன்...
Fon : 0231 5574 319
Fon : 0231 5896 557
Mob : 017621682149

## வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை

# ஏஞ்சலா மெர்கல்



**யேர்மனியில் நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிந்து, புதிய அரசாங்கம் பதவி ஏற்க இருக்கின்றது. 16 ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்த ஏஞ்சலா மெர்கலின் காலம் முடிகிறது. புதிய அரசாங்கம் பதவி ஏற்கும் வரை ஏஞ்சலா மெர்கல்தான் யேர்மனியின் பிரமதமராக இருப்பார்.**

**வி. சபேசன்**



ஏஞ்சலா மெர்கலுக்கு தற்பொழுது 67 வயதாகிறது. ஒரு தலைமுறையே யேர்மனியின் பிரதமராக ஏஞ்சலா மெர்கலைத்தான் நினைவில் வைத்திருக்கின்றது. புதிய அரசாங்கம் பதவி ஏற்பது டிசம்பர் வரை தள்ளிப் போனால், யேர்மனியில் நீண்ட காலம் பிரதமராக இருந்தவர் என்கின்ற பெருமையையும் ஏஞ்சலா மெர்கல் பெற்றுக் கொள்வார்.

ஏஞ்சலா மெர்கலின் வரலாறு சற்று வித்தியாசமானது. ஏஞ்சலா அன்றைய மேற்கு யேர்மனியில் ஹம்பேர்க் நகரத்தில் 1954ஆம்ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தையார் ஒரு கிறிஸ்தவ மதகுருவாக கடமை ஆற்றியவர். அவருக்குக் கிழக்கு யேர்மனிக்கு மாற்றல் வந்தது. ஏஞ்சலாவும் கைக்குழந்தையாகக் கம்யூனிச நாடான கிழக்கு யேர்மனிக்குப் போக வேண்டிய நிலை உருவானது. ஏஞ்சலா கிழக்கு யேர்மனியில்தான் வளர்ந்தார். பேர்லின் சுவர் கட்டப்பட்டு நிலைமைகள் மோசம் அடைந்த பொழுது, ஏஞ்சலா சிறுமியாக இருந்தார். ஏஞ்சலா தனது தந்தையின் ஊடாக கிறிஸ்தவ போதனைகளைப் பெற்றிருந்தார். கருத்துச் சுதந்திரம் குறித்தச் சிந்தனைகள் அவரிடம் வளர்ந்திருந்தன.

ஏஞ்சலா கம்யூனிச அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற இளையோர் அமைப்பு ஒன்றில் உறுப்பினராக இருந்தார். ஆயினும் மாணவர்களுக்கென்று நடத்தப்படுகின்ற சில நிகழ்வுகளில் கலந்து கொள்ள மறுத்து, கலகம் செய்யவும் முற்பட்டார். அதே வேளை அரசியலில் அவர் முழுதாக ஆர்வம் காட்டவில்லை. இயற்பியல் குறித்த கற்கையிலேயே அவருடைய கவனம் இருந்தது. அதே துறையில் அவருக்கு வேலையும் கிடைத்தது. வேலைக்கு போகின்ற வழியில் பேர்லின் சுவரை வெறித்துப் பார்த்தபடியே தினமும் பயணித்துக் கொண்டிருந்தார்.

1989இல் கிழக்கு யேர்மனியில் மக்கள் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. பேர்லின் சுவர் மக்களால் உடைக்கப்பட்டது. கிழக்கு யேர்மனியும், மேற்கு யேர்மனியும் இணையும் சூழ்நிலை உருவானது. ஏஞ்சலா அரசியலில் பங்கெடுக்க முடிவெடுத்தார். எல்லோரும் பங்களிப்பதன் ஊடாகவே இணைவைத் துரிதப்படுத்த முடியும் என்பது அவருடைய உறுதியான கருத்தாக இருந்தார்.

ஏஞ்சலா 1989 டிசம்பரில் ஜனநாயக எழுச்சி என்கின்ற சிறிய கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அந்தக் கட்சியின் பேச்சாளர்களில் ஒருவராக இருந்தார். 1990இல் கிழக்கு யேர்மனியில் முதலாவது சுதந்திரமான தேர்தல் நடைபெற்றது. 'யேர்மனிக்கான கூட்டணி' என்கின்ற பெயரில் கிறிஸ்தவ ஜனநாயக கட்சியுடன் 'ஜனநாயக எழுச்சி' கூட்டணி அமைத்தது. அதன் பின்னர் அமைக்கப்பட்ட கிழக்கு யேர்மனியின் அரசாங்கத்தின் பேச்சளராக கடமையாற்றினார். கிழக்கையும், மேற்கையும் இணைப்பதற்கான வேலைத் திட்டங்களில் முழுமையாகப் பங்கெடுத்தார்.

1990களின் கடைசிப் பகுதியில் ஜனநாயக எழுச்சிக் கட்சி கிறிஸ்தவ ஜனநாயக கட்சியுடன் இணைக்கப் பட்டது. ஏஞ்சலா கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர் ஆனார். இணைந்த யேர்மனியின் பிரதமராக அப்பொழுது ஹெல்முட் கோல் பதவியில் இருந்தார். இன்று வரை யேர்மனியில் அதிக காலம் பிரதமராக இருந்த பெருமை ஹெல்முட் கோலுக்கே இருக்கிறது. ஏஞ்சலாவின் சிறப்பான செயற்பாடுகளை ஹெல்முட் கவனித்துக்




கொண்டிருந்தார். தன்னுடைய அமைச்சரவையில் ஏஞ்சலாவை இணைத்துக் கொள்ளத் தீர்மானித்தார். 'பெண்கள், சிறுவர் நலத்துறை' அமைச்சராக 1991 ஜனவரியில் ஏஞ்சலா பதவி ஏற்றுக் கொண்டார்.

கவனித்துப் பாருங்கள். கிழக்கு யேர்மனியில் 1989 டிசம்பரில் ஒரு சிறிய கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட ஏஞ்சலா, ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்து 1991 ஜனவரியில் இணைந்த யேர்மனியில் ஒரு அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். ஏஞ்சலா மெர்கலின் வளர்ச்சி என்பது ஆச்சரியம் தரத்தக்க வகையில் வேகமானதாக இருந்தது.

பெண்களுக்கு இயல்பாகவே அரசியல் களங்களில் இருக்கின்ற பிரச்சனைகள் ஏஞ்சலா மெர்கலுக்கும் இருந்தது. ஒரு தரப்பு அவரை அலட்சியப்படுத்த முனைந்தது. ஆயினும் ஏஞ்சலா மெர்கலின் வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. பிரதமர் ஹெல்முட் கோல் ஒரு தந்தை போன்று ஏஞ்சலா மெர்கலுக்கு துணையாக நின்றார். 1994 இல் நடந்த தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட அமைச்சரவையிலும் ஏஞ்சலா மேர்கல் இடம் பெற்று, சுற்றுச் சூழல் அமைச்சராகப் பதவி வகித்தார். கட்சிக்குள் ஏஞ்சலா மெர்கலின் செல்வாக்கு அதிகரித்தது.

1998இல் நடந்த தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி தோல்வியுற்று, புதிய ஆட்சி அமைந்தது. 1999இல் கட்சிக்குள் குழப்பங்கள் உருவாகின. கட்சிக்கு வந்த அன்பளிப்புகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாக சர்ச்சை உருவானது. ஹெல்முட் கோல் பதில் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆட்சியையும் இழந்து, ஊழல் பற்றிய சர்ச்சைக்குள்ளும் சிக்கிக் கொண்ட கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி ஒரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

ஏஞ்சலா மெர்கல் கட்சிக்கு உற்சாகம் ஊட்டினார். ஹெல்முட் கோலுடம் இருந்து தள்ளியே நின்று கொண்டார். தன்னுடைய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்களைக் கூட தேவைப்பட்டால் உதறுவதற்கு ஏஞ்சலா மெர்கல் தயங்கவில்லை. தன்னுடைய பாதையை அவர் தெளிவாக வகுத்திருந்தார்.




2000ஆம் ஆண்டில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைவராக ஏஞ்சலா மெர்கல் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியில் இணைந்த பத்து ஆண்டுகளில் கட்சியின் தலைவராக வந்து விட்ட ஏஞ்சலா மெர்கலை பலர் ஆச்சரியத்துடன் பார்த்தனர். 2002இல் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அந்த நேரம் இன்னொரு நெருக்கடியை ஏஞ்சலா மெர்கல் சந்தித்தார். ஏஞ்சலா மெர்கல் பிரதமர் வேட்பாளராக நிற்க வேண்டும் என்று ஒரு தரப்பு விரும்பியது.

ஏஞ்சலா மெர்கலுக்கும் அந்த விருப்பம் இருந்தது. ஆனால், கட்சியில் செல்வாக்கு பெற்றிருந்த எட்முண்ட் ஸ்ரொய்பர் என்பவரை பிரதமர் வேட்பாளராக ஆக்க வேண்டும் என்று இன்னொரு தரப்பு தீவிரமாக செயற்பட்டது. ஏஞ்சலா மெர்கால் இந்தப் பிரச்சனையைத் திறமையாக கையாண்டார். எட்முண்ட் ஸ்ரொய்பருடன் நேரடியாகப் பேசினார். எட்முண்ட் ஸ்ரொய்பர் பிரதமர் வேட்பாளராக ஆவதற்கு சம்மதம் தெரிவித்தார். கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொண்டார். தன்னுடைய நேரத்திற்காக ஏஞ்சலா மெர்கல் காத்திருந்தார்.

அந்தத் தேர்தலிலும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி தோல்வியுற்றது. ஏஞ்சலா மெர்கல் பிரதமர் வேட்பாளராக அப்பொழுது அடம்பிடித்து நின்றிருந்தால், அத்துடன் அவரது அரசியல் பயணம் முடிவு பெற்றிருக்கும்.

2005இல் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. இப்பொழுது ஏஞ்சலா மெர்கலைப் பிரதமர் வேட்பாளராகக் கட்சி தேர்ந்தெடுத்தது. இரண்டு தடவைகள் தோற்ற பின்னர் இப்பொழுது கட்சியை வெல்ல வைத்து, ஆட்சிக் கட்டிலில் ஏற்ற வேண்டிய பொறுப்பு ஏஞ்சலா மெர்கலிடம் வந்திருந்தது. பிரதமர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் ஏஞ்சலா மெர்கல் உரையாற்றினார்.

அனைவரின் கண்களும் தன் மீது குவிந்திருப்பதை உணர்ந்த அவருடைய உடல் நடுங்கியது அப்பட்டமாக தெரிந்தது. கூட்டணிக் கட்சியின் பெயரை மாற்றிச் சொல்லி உளறினார். ஆளும் கட்சி உறுப்பினர்கள் உரத்த குரலில் சிரித்தார்கள். இவரா இந்த நாட்டின் பிரதமராகப் போகிறார்? என்கின்ற தொனி அவர்களுடைய சிரிப்பில் இருந்தது. ஏஞ்சலா மெர்கலின் கட்சியைச் சேர்ந்த சிலரும் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்கள்.

அந்தத் தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி மயிரிழையில் வெற்றி பெற்றது. ஏஞ்சலா மெர்கல் யேர்மனியின் பிரதமர் ஆனார். அதன் பிறகு வந்த தேர்தல்களிலும் வெற்றி பெற்று அசைக்க முடியாத ஒரு தலைவராக 16 ஆண்டுகள் யேர்மனியை ஆண்டார்.

யேர்மனியில் பல்வேறு மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்கின்ற கனவுகளுடன் வந்த ஏஞ்சலா மெர்கல், அவற்றை சாதித்தாரா? என்பதை மற்றொரு முறை நேரம் கிடைத்தால் எழுதுகிறேன். எது எப்படி இருப்பினும், யேர்மனியின் முதற் பெண் பிரதமராக 16 ஆண்டு காலம் பதவி வகித்த ஏஞ்சலா மெர்கல் யேர்மனியின் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாக தன்னை நிலை நிறுத்தியுள்ளார் என்பதை யாருமே மறுக்க முடியாது.




# சொல் அல்ல செயலே அவசியம்

**பூமிபுத்திரன்**

ஆப்கானிஸ்தானின் புதிய ஆட்சியாளர்களான தலீபான்கள் 33 பேர் அடங்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அறிவித்துள்ளனர். மேற்குலகிற்கு வேண்டப்படாத பலரும், இந்த அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், ஒரு சில நாடுகள் தலீபான்களின் முயற்சியை வரவேற்று அறிக்கைகளை விடுத்துள்ளன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் இடம்பிடித்துள்ள தலைமை அமைச்சர், இரண்டு துனைத் தலைமை அமைச்சர்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் ஐ.நா.சபையின் தடை செய்யப் பட்டோர் பட்டியலில் உள்ளனர். இந்நிலையில் புதிய அரசாங்கத்தை உத்தியோகப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளுவதில் நடைமுறைச் சிக்கல்களும், சங்கடங்களும் நிலவுவதில் வியப்பேதும் இல்லை. எனினும், யதார்த்தத்தில் தலீபான்களுடன் பேசுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் அற்ற நிலையே உள்ளது.

இந்நிலையில் தலீபான்களின் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள அமீர்கான் முற்றாகி, புதிய அரசாங்கத்தை அங்கீகரித்து தம்மோடு இணைந்து பணியாற்ற பன்னாட்டுச் சமூகம் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், தமது நாட்டுக்குச் சொந்தமான நிதியைத் தடுத்து வைத்துள்ள அமெரிக்காவின் செயற்பாடுகளைக் கண்டித்துள்ளார்.



அமெரிக்கப் படைகள் எந்தவித பாதிப்புகளும் இன்றி நாட்டைவிட்டு வெளியேற இறுதிவரை உதவிய தங்களுக்கு, இத்தகைய பிரதியுபகாரத்தை அமெரிக்கா செய்திருக்கக் கூடாது என்பது அவரது நிலைப்பாடு. (ஆப்கானிஸ்தானுக்குச் சொந்தமான நிதியில் 9 பில்லியன் டொலர் வரை வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே!. இன்றைய காலகட்டத்தில் ஆப்கான் மக்களுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இந்த நிதி விடுவிக்கப்





பட்டாலேயே அங்குள்ள மக்களின் பெரும்பாலான தேவைகள் நிறைவேற்றப்பட வாய்ப்பு உள்ளது.)

மறுபுறம், செப்டம்பர் 13ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஆப்கானிஸ்தானுக்கு ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான உதவிகளை வழங்க உலக நாடுகள் முன்வந்துள்ளமையை அவர் பாராட்டி உள்ளார். ஐ.நா. உலக உணவு நிதியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பல மேற்குலக நாடுகள், ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் தொடர்பான கரிசனைகளை வெளிப்படுத்தின.

மனித உரிமைகளை மதித்தல், பெண்களின் கல்வி, தொழில் புரிதல், அரசியல் பங்களிப்பு உள்ளிட்ட உரிமைகளை மதித்தல், நாட்டை விட்டு வெளியேற விரும்புவோரை வெளியேற அனுமதித்தல் போன்ற விடயங்களைத் தலீபான்கள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்பது அவற்றின் நிலைப்பாடு. அவர்களைப் பொறுத்தவரை, தலீபான்களின் பேச்சுக்களில் இருந்து அல்ல, செயல்களில் இருந்தே அவர்கள் பற்றிய மதிப்பீடு அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை அத்தகைய நாடுகளின் பிரதிநிதிகள் வெளிப்படுத்தி உள்ளனர்.



தலீபான்கள் விடயத்தில் மென்மைப் போக்கைக் கடைப்பிடிக்கும் சீனா, ரஸ்யா உள்ளிட்ட நாடுகள் மேற்குலகின் இந்தக் கரிசனைகள் நியாயமானவை என்பதை ஏற்றுக் கொண்டாலும், தலீபான்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றன. கிட்டத்தட்ட இதே போன்றதொரு கருத்தே ஐ.நா.சபை அதிகாரிகளிடம் இருந்தும் வெளிப்பட்டு இருக்கின்றது.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்த வரை கடந்த பல வருடங்களாக அந்த நாட்டின் மொத்த வருமானத்தில் 46 வீதம் வெளிநாட்டு உதவிகள் மூலமேயே கிடைத்து வந்தது. நாட்டு மக்கள் தொகையில் சற்றொப்ப அரைவாசிப் பேர் உணவு உள்ளிட்ட தேவைகளுக்காக தொண்டு நிறுவனங்களின் உதவியிலேயே தங்கியுள்ளனர்.

இவர்களுள் 4 மில்லியன் பெண்களும் 10 மில்லியன் சிறார்களும் அடக்கம். ஆகஸ்ட் 15ற்குப் பிந்திய எதிர்பாராத நிலைமை காரணமாகத் தொண்டு நிறுவனங்களின் நிவாரணப் பணிகள் முழுவதுமாகத் தடைப் பட்டுள்ளன. சுகாதார நிலைமைகள் மோசமான கட்டத்தை அடைந்துள்ளன. விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால் மக்கள் பட்டினி காரணமாக இறக்கக்கூடிய சூழல் ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்த வருடம் இயற்கையும் கூட ஆப்கானிஸ்தான் மக்களுக்கு எதிராகவே இருக்கின்றது. அந்த நாட்டில் இவ்வருடம் ஏற்பட்ட வறட்சி, உள்நாட்டு உணவு உற்பத்தியில் மிகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆப்கான் மக்களில் 70 வீதமானோர் கிராமங்களில் வசித்துவரும் நிலையில், அவர்கள் இந்த வறட்சியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் உள்ள 34 மாகாணங்களில் 25 மாகாணங்கள் வறட்சியை எதிர்கொண்டுள்ள நிலையில், கிட்டத்தட்ட 7.3 மில்லியன் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அது தவிர, ஆப்கானிய மக்களின் உணவுத் தேவையில் பெரும்பகுதியை நிறைவு செய்யும் கோதுமையின்




DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை மொத்தமாக
பெற்றுக் கொள்ள நாடுங்கள்
StaR-Impex
பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்
Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net
Bringing Health to Life

உற்பத்தியும் கேள்விக்குறியாக ஆகியுள்ளது. விதைப்புக் காலம் ஆரம்பமாக உள்ள நிலையில், விவசாயத்துக்குத் தேவையான போதிய நிதியோ, ஏனைய விவசாயப் பொருட்களோ இல்லாத நிலையில் விவசாயிகள் செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

தலீபான்களில் ஆட்சியைத் தொடர்ந்து வங்கிச் சேவைகள் பெரிதும் முடங்கிப் போயுள்ளன. அந்நியச் செலாவணிக்குப் பெரிதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், வங்கிகளில் இருந்து பணத்தை மீளப் பெறுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வாரமொன்றுக்கு 20,000 ஆப்கானியை மாத்திரமே (200 டொலர்) மீளப்பெறலாம் என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், வங்கிகளின் முன்னே நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மேற்குலக நாடுகள் நிலைமையைப் புரிந்துகொண்டு ஒருசில இணக்கப் பாடுகளுக்கு வந்தாலும் கூட, தலீபான் அரசாங்கத்தின் ஊடாக நிவாரணங்களை மேற்கொள்ளாமல் பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள் ஊடாகவே செயற்பாடுகளை முன்னெடுக்க ஆர்வம் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை அயல்நாடுகளான பாகிஸ்தானும், சீனாவும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பாகிஸ்தான் உடனடியாகவே ஒரு தொகுதி சமையல் எண்ணை மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. 31 மில்லியன் டொலர் பெறுமதியான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள சீனா, 3 மில்லியன் கொரோனாத் தடுப்பூசிகளையும் வழங்கவுள்ளது.

உள்நாட்டு மோதல்கள் மற்றும் தலீபான்களின் நடவடிக்கைகள் காரணமாகத் தடைப்பட்டுப் போயுள்ள தடுப்பூசி வழங்கல் நடவடிக்கைகள் விரைந்து சீர்செய்யப்பட வேண்டிய நிலை உள்ளதால், சீனா வழங்கும் தடுப்பூசிகள் பேருதவியாக அமையக் கூடும் என்பது சொல்லாமலேயே புரியும்.

20 வருடங்களுக்கு மேலாகச் சண்டையிட்டு, அந்நியப் படைகள் வெளியேறிய ஒரு சில நாட்களிலேயே முழு நாட்டையும் இலகுவாகத் தமது பிடியில் கொண்டு வந்துவிட்ட தலீபான்களைப் பொறுத்தவரை யுத்த களத்தை விடவும், ஆட்சிக் களமே கடினமாக இருக்கப் போகின்றது என்பதையே கள நிலவரம் தெளிவு படுத்துகின்றது.

இந்தக் கள நிலவரத்தைப் புரிந்து கொண்டு, தங்கள் கடந்த காலக் கொள்கைகளைத் திருத்திக் கொண்டு செயற்பட தலீபான்கள் முன்வருவார்களேயானால் ஆப்கான் மக்களின் வாழ்வு மகிழ்ச்சியானதாக அமையக் கூடும். 'பழைய குருடி, கதவைத் திறடி' என்ற பாணியில் பயணிப்பார்களேயானால் கிட்டிய எதிர்காலத்தில் ஆப்கானிஸ்தானில் மீண்டும் வன்முறை தாண்டவமாடுவதை யாராலும் தடுத்துவிட முடியாது.



# HANDY WELT

TRAVEL WITH OUR PHONE

- Handy Reparatur
- Handy Aufladen
- Handyvertag
- Günstige Sim Karten
- Handy-Zubehör
- Geld senden








வீட்டு மின்சாரக் கட்டணத்தை
கட்டுப்படுத்த வேண்டுமா?
கவலையை விடுங்க!
எங்களை அழையுங்க...

## 0231
## 961 26 555

SCAN MICH

1&1 · ay yıldız · yourfone (FÜR DICH. FÜR SIE. FÜR ALLE.) · O2 · Blau · T · stromschalten.de · WESTERN UNION WU · Ria MONEY TRANSFER

Mallinckrodt Str. 70 • 44145 • Dortmund
01630 33 32 33 • 0231 981 89 888
handyweltdo20@gmail.com



அவதானி

பகுதி.38

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

இந்தியாவின் உளவு நிறுவனமான 'றோ', இலங்கையின் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதற்கு இன முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கு முதல் திட்டமாக இனக்கலவரத்தைத் தோற்றுவித்ததைக் கட்டுரை 37இல் அதன் ஆரம்ப நிலையைக் குறிப்பிட்டிருந்தேன்.

இனக்கலவரத்தைத் தோற்றுவிப்பதற்கு எவ்வகையான உத்திகளை, பொய்ப் பிரச்சாரங்களை, வதந்திகளைத் தோற்றுவிக்கலாம் என்பதை இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிக்கின்ற இராஜதந்திரிகள் தயாரித்து, அதனை றோவிடம் கையளிப்பதும், இராஜதந்திரிகளின் திட்டத்தை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல பொதுமக்கள், அரசியலாளர்கள், அதிகாரிகள் என அனைத்து மட்டத்திலும் செயல்படுத்துவதே அவர்களின் உளவு வேலையாக இருந்தன.

உலக வலயத்தில் அமைந்திருக்கும் நாடுகளைக் கையாள்வதற்கு வல்லரசு நாடுகள் அந்தந்த நாடுகளுக்கு அயல்நாடுகளாக இருக்கும் நாடுகளுடன் நட்புக் கொண்டும், அந்த நாட்டினுடைய பொருளாதார, அந்நாட்டினுடைய பூமிசார் வள அபிவிருத்தி, இராணுவ, காவல்துறை போன்ற அனைத்து கட்டமைப்புகளுக்கு உதவி செய்வதுடன், பெருந்தொகையான நிதியினை வட்டியுடனான கடனாகவும், வட்டியில்லாக் கடனாகவும், அன்பளிப்பாகவும் கொடுத்துத் தமக்குத் தேவையான நாட்டினை தமது கைக்குள் போட்டுக் கொள்கின்றன.

இக்கட்டுரையின் ஆரம்ப தொடர்களில் உளவு நிறுவனங்கள் ஒரு நாட்டில் காலூன்றுவதற்கும், தனிமனிதர் தொட்டு நிறுவனங்களுக்குள் ஊடுருவதற்கு அந்நாட்டு மக்களின் குணாம்சமும், அவர்கள் கட்டிக்காத்து வருகின்ற பண்பியல் விழுமியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்திருந்தேன்.

உளவு நிறுவனங்கள் ஒரு போதும் எல்லா நாடுகளிலும் ஒரேவிதமான அணுகுமுறையை கையாள்வது கிடையாது. தனிமனித பலம், பலவீனம் என்பவற்றையே தமது உளவு பார்த்தலுக்கு முக்கியமான காரணியாகக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு தீவு என்று பொதுமக்களில் சராசரியினர் நம்பிக் கொண்டிருந்தாலும், அதனுடைய கேந்திர முக்கியத்துவத்தை மன்னர் ஆட்சிகாலத்திலிருந்தே அன்றிருந்த அரசவை அறிஞர்கள் தொடக்கம் இன்றுவரையான நவீன அரசியல் இராஜதந்திரிகள் வரை அறிந்தே வைத்திருக்கின்றார்கள்.

இந்தியாவின் உளவு நிறுவனமான 'றோ' என்றவுடன் சாதாரண மனிதர்களின் மூளையில் அவர்கள் இந்திய இராணுவத்தில் உள்ளவர்கள் போன்றோ அல்லது இந்தியக் காவல்துறையினர் போன்றோ ஒரு தனித்துவமான அடையாளம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள் என்றால் அது தவறு.

'றோ'வின் தலைமைப் பீடம் உளவறிதல், இரகசியங்களை ஒருவரிடமிருந்து கசியவிட்டும், பிறகு அங்கிருந்து பிடுங்கி எடுக்கும் நுட்பத்தைக் கொண்ட கல்வியாளர்கள் பலரைக் கொண்ட அமைப்பாகும். இந்த அமைப்பில் பலதரப்பட்ட பணிகளில் உள்ளவர்கள் அங்கம் வகிப்பார்கள். மிகப்பெரும் அதிகாரிகளிலிருந்து, வீதியில் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்கள் வரை இதில் அங்கம் வகிப்பார்கள். இது ஆச்சரியமாகத் தோன்றலாம்.

ஆனால், உலக நாடுகளின் உளவு நிறுவனங்கள் உளவு பார்த்தலையும், ஒரு நாட்டினுடைய பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட முப்படைகளுக்கு நிகராக உளவு பார்த்தல் பணிக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

உன்னிப்பாகக் கவனிப்போமானால் உலக நாடுகள் பல ஒன்றையொன்று நட்பு நாடுகள் என தம்மை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டாலும் அவை நட்புநாடுகளையும், உளவு பார்க்கும் மறைமுக வெளிநாட்டுக் கொள்கை சார்ந்த இராஜதந்திர அரசியலையும் நடத்திக் கொண்டுதானிருக்கிறார்கள்.

இலங்கையுடன் ஆரம்ப காலத்திலிருந்தே இராஜதந்திரத் தொடர்புகளைவிட வணிகத் தொடர்பே



மிகுதியாக இருந்தது. மொத்த வியாபாரிகளாகவும், சில்லறை வியாபாரிகளாகவும் இலங்கையில் இந்திய வணிகர்கள் தமது வணிகத்தைச் செய்து கொண்டிருந்தார்கள்.

இலங்கையில் இனக்கலவரங்களுக்கு அடித்தளம் அமைத்தவர்களே இவர்கள்தான். இவர்களில் வீடு வீடாகக் கொண்டு சென்று துணிவகைகள் தொடக்கம், பொருட்கள் விற்றவர்களை உன்னிப்பாக கவனிப்போமானால் அவர்கள் வீடுகளுக்குப் போகும் போதெல்லாம் தம்மோடு கொண்டு வந்த பொருட்களை விற்பனை செய்வதோடு, அவ்வீட்டில் உள்ளவர்களின் சமூக அரசியல் கருத்துகளில் அவர்களின் நிலைப்பாடுகள் என்ன? என்பதை கதையோடுக கதையாக அறிந்து கொள்வார்கள்.

அவ்வீட்டில் உள்ளவர்கள் துணி விற்க வந்தவர் ஏதோ பொழுது போக்கிற்குத்தான் அதையும், இதையும் பேசுகிறார் என நினைப்பார்கள். சில வீடுகளில் உள்ளவர்களில், அரசியல் ஆர்வமுள்ளவர்கள் தாம் இலங்கை அரசியலில் என்ன அபிப்பராயத்தைக் கொண்டிருக்கிறோமோ அல்லது அதிருப்தியைக் கொண்டிருக்கிறோமோ அல்லது கவலையைக் கோபத்தைக் கொண்டிருக்கிறோமோ அதை துணி விற்க வந்தவரிடம் யதார்த்தமாகச் சொல்லிவிடுவார்.

துணி விற்பனையாளர் என்ற ஒற்றர் வேடத்தில் வந்தவரும் தனக்கு அரசியல் என்பதோ, இன உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களிலோ அதற்கான நாட்டமோ, அதற்கான அறிவோ இல்லையென்பது போல பாவனை செய்து, வீட்டார் சொன்ன அத்தனை விடயங்களில் அக்கறையில்லாதவர் போல கிரகித்து விடுவார்கள். இவையாவும் ஒரு அபிப்பராயமாக ஒருவர் மாறி ஒருவருக்கு காவப்பட்டு, கையளிக்கப்பட்டு துணி விற்பவர் யாரிடம் துணிகளை வாங்குகிறாரோ அவரைச் சென்றடைந்துவிடும்.

இந்திய மொத்த வியாபாரிகளோடுத் தொடர்புடையவர்களாக இன்னும் பல இந்திய மொத்த வியாபாரிகள் இருப்பார்கள். அவர்களுடன் ஆங்காங்கே மக்கள் அபிப்பராயங்களாகப் சிறுக சிறுகப் பெறப்பட்ட மக்களின் அரசியல் உணர்வுகள் யாவும் கலந்துரையாடல் வடிவம் பெற்று, அவை யாவும் ஒருங்கிணைக்கப்பட்டத் தகவலாக இந்திய உளவு நிறுவனத்தின் ஒரு அங்கமாகச் செயல்படும் இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கப்படும்.

சில்லறை வியாபாரிகளில் ஒரு பகுதியினராக வீடு வீடாக துணி விற்பவர்களாகவும், ஊசி, நூல், சீப்பு, சோப்பு, பொட்டு விற்பவர்களாகவும் இருப்பவர்களுடன் வீடுகளுக்குச் சென்று வெற்றுப் போத்தல்களை வாங்கி, அவற்றைக் கழுவிச் சுத்தம் செய்து, அதனை விற்கும் வியாபாரிகளும் இதில் அடங்குவர்.

பொதுமக்களின் பார்வையில் இந்தியாவில் இருந்து பிழைப்புத் தேடி வந்தவர்கள் என்ற பரிதாப நிலையே அவர்கள் கொண்டுள்ள கருத்தாகும். ஆனால், பத்து வியாபாரிகளில் ஒருவர் உளவு நிறுவனத்தின் ஒற்றராகவே இருப்பார்.

எவ்வாறு தமிழர் பிரதேசங்களில் இத்தகு வியாபாரிகள் றோவிற்காக ஒற்றர் வேலை பார்த்தார்களோ, அதே போல சிங்கள மொழியை நா நுணியில் பேசவல்ல மேற்சொன்ன வியாபாரிகள், சிங்கள மக்களின் வீடுகளுக்கும் துணி வகைகளையும், இதர பொருட்களையும் விற்கச் செல்வதும், அங்கும் அம்மக்களின் அபிப்பராயங்களை சேகரிப்பவர்களாகவும் செயல்பட்டிருக்கின்றார்கள்.

**[தொடரும்]**

# IMPORTAS
Cash & Carry

**Kranichweg 8, 3074 Muri Bei Bern**
☎ 031 951 24 44

**Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland**
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

# IMPORTAS CENTER

எம்முடன் இணைந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள வியாபாரிகள் தேவை...

200+
பார்க்கிங் வசதியுடன்




உங்கள் வியாபாரத்தை அமைப்பதற்கான இடவசதியுள்ளது.

மேலதிக கடைகளை அமைக்க விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்.

+41 78 883 21 99 | info@globalstoreag.ch | Importas Oftringen

**ப்ரியமதா பயஸ், தமிழீழம்**

## சிறப்புரிமைகள் எப்போதும் பொதுவானது

# நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைதும், அதிருப்தியும்







**மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் சிறப்புரிமைகள் மறுக்கப்படுவதும், தமிழர்களுக்கு இழக்கப்படும் அநீதியாகவே உள்ளது. போரில் இலட்சக்கணக்கான மக்களை இழந்த எமக்கு, அவர்களை நினைவு கூற அனுமதி மறுக்கப்படுவது என்பது, எந்த நாட்டிலும் இல்லாத அராஜகமான செயற்பாடே அன்றே வேறு இல்லை.**

உலகம் என்று சொல்லப்படுகின்ற, ஜீவராசிகள் வாழ்கின்ற இந்த பிரபஞ்சத்தில் மனிதனுக்கு எப்போதும் முக்கியத்துவம் உண்டு. காரணம், அவனாலேயே ஏனைய அனைத்து உயிரினங்களும் கட்டுப்படுத்தப் படுகின்றன. ஆனாலும், சிறப்புரிமைகள் எப்போதும் பொதுவாக இருக்கின்றது. இந்த சிறப்புரிமையைச் சிறப்பிக்க உருவாக்கப்பட்டதுதான் உலக மனித உரிமைகள் தினம். ஆனால், உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கே என்று வரையறுக்கப்பட்ட மனிதனால் விட்டுக்கொடுக்க முடியாத, உரிமைகளை மனித உரிமை என்ற வரையறைக்குள் கொண்டு வரலாம்.

இலங்கையில் அதன்தன்மை மதிக்கப்பட வேண்டியவர்களிடம் இல்லாமல் போயிருப்பது வருந்தத்தக்க விடயம். தமிழர் என்றால் அது எப்பேற்பட்டவராக இருந்தாலும், அவர்களுக்குச் சிறப்புரிமையோ, மரியாதையோ கிடையாது என இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், இலங்கை சட்டம் அனைத்தும் ஒரே வகையிலேயே சொல்கிறது.

மனித உரிமைகள் பாதுகாக்கப் படுவதை அனைத்து தரப்பினரிடமும் வலியுறுத்துவதே சட்ட பாதுகாவலர்கள் கடமை. உலகில் உள்ள அனைத்து மனிதர்களும் ஒவ்வொருவருக்கொருவர் சமமானவர்களே!. எல்லோருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ, அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். யாரையும் யாரும் அடிமைப்படுத்தும் அதிகாரம் யாருக்கும் இல்லை.

மனிதனின் தன்னிச்சயான பண்பை, அவனின் பிரிக்க முடியாத உரிமைகளை

அறிந்து தெரிந்து ஏற்றுக்கொள்வதே மனிதனுக்கு வழங்கும் சுதந்திரம்.

மனித உரிமை என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. யாராலும் யாருக்கும் வழங்கப்பட்டதும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது அவனுடன் இணைந்து பிறந்ததுதான் மனித உரிமை. அதனால் ஒருவரின் உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.

இலங்கையை பொறுத்தவரை மனித உரிமைகள் தொடர்பில் இன்னமும் சிறந்த விழிப்புணர்வு அவசியம் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் காட்டு மிராண்டித் தனமாக கைது செய்யப்பட்ட சம்பவம் அப்பட்டமாக வெளிக்கொணர்ந்துள்ளது .

எந்த அரசியல் கொள்கையும் இல்லாமல் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில்தான் தங்கி இருக்கிறது .

அனைத்து நாடுகளை போலவும் இலங்கை மக்களும், மனித உரிமைகளை அனுபவிக்க காலம் ஒன்று வரவேண்டும் என்பதே அனைவரினதும் அவாவாக இருக்கின்றது.

இன்றைய நாள் வரையும் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், யுத்த குற்றங்கள் என்பன எல்லை மீறிய அளவில் இடம்பெற்று இருப்பது உலகம் அறிந்த விடயமாக இருப்பினும், அவற்றுக்கான தீர்வுகள் இன்னமும் காணப்படாமல் இருக்கின்றமை மனித உரிமைகளை அதாவது மனிதனின் அடிப்படை உரிமைகள் கூட மீறப்பட்டும், மறுக்கப்பட்டும் உள்ளமையைக் கோடிட்டு காட்டுகின்றது.

சட்டம் ஒழுங்கை பாதுகாப்போம் என்ற போர்வையில் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி சிங்கள, பௌத்த மேலாண்மையை நிறுவவே அரசு முற்படுகின்றமை உணர்வுகளை மதிக்காத கைதிகளின் மூலம் வெளிவருகிறது.

தனிமைப்படுத்தல், சட்டத்தை மீறியதாகக் கூறி தியாகி திலீபனின் நினைவு




தினத்துக்கு சுடரேற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார். இதில் அவர் தனியாகத்தான் அங்கு சுடரேற்ற சென்று இருந்ததாகத் தெரிவித்துள்ளார். அந்த இடத்தில் காவல்துறையினர் தன்னுடன் முரண்பட்ட போது, என்ன நடைபெறுகின்றதென நியாயம் கேட்க முற்பட்டவர்களையும் சேர்த்து கைது செய்து, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாக எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதி வழக்குக்கு தவணையிடப் பட்டுள்ளது.

தனி ஒருவனாக தான் அந்த இடத்தில் சென்றால் கூட சட்டத்தை மீறியதாக சித்தரிக்கப்படுகின்றது. சிறைச்சாலைக்குள் சென்று கைத்துப்பாக்கியை தலையில் வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

அதே வேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே அஞ்சலி செலுத்த முற்பட்டார் என்றும் காவற் துறையினருக்கும், தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார் என்றும் ஆனாலும், இலங்கை காவற்துறையினரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளனர் என்றும், கஜேந்திரனின் நாடாளுமன்ற சிறப்புரிமையை அவமதித்த யாழ்ப்பாணம் காவல் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய காவற்துறையினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக இப்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

செல்வராஜா கஜேந்திரன் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படும் போது தாம் நினைவு கூர்தலை தவறு என்று



கூறவில்லை. கொரோனா தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறியமையாலேயே கைது செய்ததாக தெரிவித்துள்ளமை அநாகரீகத்தின் உச்சமாக உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவ்விடத்தில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே நினைவேந்தல் செய்ய முற்பட்டார். காவற்துறையினருக்கும், தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், காவற்துறையினரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர். அராஜகமாக கஜேந்திரனின் உடலைப் பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கைகளை காவற்துறையினர் மேற்கொண்டனர் என் அவரின் கட்சி சார்ந்தவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவர் கைது செய்யப்பட்டதை அறிந்து அவ்விடத்துக்குச் சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரு பெண் உறுப்பினர்கள் காவற்துறையினரால் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டனர் என்றும் அவர்கள் இப்போது குற்றம் சாட்டியுள்ளனர்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் கைது செய்யப்பட்டிருந்தால், அவர் அந்த நினைவிடத்துக்குச் சென்ற போதே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏன் கற்பூரம் ஏற்றி, நினைவேந்தல் செய்ய முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டார் என்றும் அவர்கள் தற்போது கேள்வி எழுப்பியுள்ளனர் .

கஜேந்திரனை கைது செய்தமைக்கு கொரோனா விதிமுறைகள் காரணமல்ல, நினைவேந்தல் செய்தமையே காரணம் எனத் தெரிகின்றது. ஏனெனில் நினைவேந்தல் மேற்கொண்ட இடத்தில் கஜேந்திரன் மாத்திரம் இருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் இருந்தார்கள். திலீபனின் நினைவிடத்தில் காவற்துறையினர் வந்தததை அறிந்ததும் பல பொதுமக்களும் கூடினார்கள்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் மீது நடவடிக்கை எடுத்திருந்தார்கள் எனில், ஏன் அங்கு கூடிய மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வில்லை?. உண்மையில் கஜேந்திரன் சுகாதார விதிமுறைகளை மீறவில்லை. அவர் நினைவேந்தல் மேற்கொண்டமைக்காவே கைது செய்யப் பட்டார் என வாதிடுவது நியாயமாகவே தெரிகிறது.

மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் சிறப்புரிமைகள் மறுக்கப்படுவதும், தமிழர்களுக்கு இழக்கப்படும் அநீதியாகவே உள்ளது. போரில் இலட்சக்கணக்கான மக்களை இழந்த எமக்கு, அவர்களை நினைவு கூற அனுமதி மறுக்கப்படுவது என்பது, எந்த நாட்டிலும் இல்லாத அராஜகமான செயற்பாடே அன்றே வேறு இல்லை.

நாம் உலக நியதிகள் எமக்கும் வேண்டும் என உரக்கக் குரல் கொடுக்கத் தள்ளப்பட்டிருக்கிறோம் - எமக்கான உரிமைகளுக்காகவும், நீதிக்காகவும் குரல்கொடுக்க நாம் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம் .

அடுத்த சந்ததிக்காக ஆயினும் உரிமைகள் கிடைக்கப்பெற்ற மனித உரிமைகளின் அவசியங்களை நாம் புரிந்துணர்வோடு கடத்த வேண்டியுள்ளோம் .


எமக்கான சுதந்திரம், உரிமை, செயற்பாடு என்பன இன்னொருவரின் கட்டுப்பாடில் இருக்கும்போது, எம்மால் மனிதனாக உரிமை பாராட்டி வாழ முடியாதச் சூழலை அடக்குமுறை வாழ்வியல் என்றே வரையறுக்க வேண்டும்.

காலப்போக்கில் இவைதான் மனித உரிமைகள் என எண்ணி கணக்கிட வேண்டிய சூழல் இலங்கையில் உருவாகாமல் இருக்க மனித உரிமைகளை போற்றுவோம்.

வி.சிவராசா






# யேர்மனிய பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2021

யேர்மனிய பாராளுமன்றத்தை ***Bundestag*** என்று அழைப்பார்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது, இந்த நாட்டின் அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி பாராளுமன்றத் தேர்தல் ஞாயிற்றுக் கிழமை 26.09.2021ம் திகதி யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களிலும் நடைபெற்றது. இத்தேர்தலானது 20வது பாராளுமன்ற பொதுத்தேர்தலாகும்.

யேர்மனிய நாட்டுத்தேர்தல் முறையில் அரசியல் கட்சிக்கும், கான்சிலராகத் தெரிவு செய்யப் படுபவருக்கும் மக்கள் வாக்களிப்பார்கள். இறுதியில் எந்தக் கட்சி கூடுதலான வாக்குகள் பெற்றுக்கொள்கிறதோ, அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் நாட்டின் ***Bundeskanzler*** கான்சிலராகத் ***(Chancellor)*** தெரிவு செய்யப்படுவார். இவர்தான் நாட்டின் அதிகாரம் மிக்க பதவியில் இருப்பார்.

யேர்மனியைப் பொறுத்தளவில் கடந்த 16 ஆண்டுகளாக அங்கல மேக்கல் ***(Angela Merkel)*** என்ற பெண்மணியே ஆட்சியைத் திறப்பட நடாத்தி வந்தார். இவர் ***CDU*** கட்சியின் தலைவராகவும், கான்சிலராகவும் ***(Bundeskanzler)*** இருந்து ஓய்வு பெறுவதால், இத்தேர்தலில் போட்டியிடாமல் இன்னொருவர் போட்டியிட விட்டுக் கொடுத்துள்ளார்.

யேர்மனிய அரசியல் வரலாற்றில் ***CDU*** கட்சி அல்லது ***SPD*** கட்சி தான் கூடுதலாக ஆட்சியில் இருந்துள்ளன. பின்னர் இரண்டு மூன்று கட்சிகளும் கூட்டணி அமைத்து, ஆட்சியை பிடித்தன. ஆனால், கடந்த இரண்டு தேர்தல்களிலும் பிரதான கட்சிகளான ***CDU*** ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் ***SPD*** ஒன்று சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடித்திருந்தன.


அங்கல மேக்கல்

நாட்டில் அண்மையில் நடைபெற்ற சில மாநிலங்களின் தேர்தல்களின் முடிவுகள், மற்றும் வெளிநாட்டு அகதிகள் வரவு, கொரோனா நெருக்கடி, வேலை வாய்ப்பு, பொருளாதார நெருக்கடிகள், சுற்றுச்சூழல், நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு போன்ற பல நெருக்கடிகளால் மக்கள் விரக்தியில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதனால் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாத நிலைதான் காணப்படுகின்றது. ஆதலால் மீண்டும் கூட்டரசாங்கம் அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலேயுள்ள படங்களில் உள்ளவர்களில் கட்சிகளின் தலைவர்களான அர்மின் லஸ்செற் அல்லது ஒல்வ் சொல்ஸ் *(Armin Laschet, Olaf Scholz)* இவர்களில் ஒருவர்தான் கான்சிலராக வருவார் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆனால், தற்போதய அரசியல் சூழலில் யார்? வெற்றி பெறுவார் என்று கூற முடியாத நிலையே காணப்படுகின்றது.

போட்டியிடும் கட்சிகளும், கட்சிகளின் தலைவர்களும் கான்சிலர் பதவிக்கான முதன்மை வேட்பாளர்களின் விபரங்களைப் பார்ப்போம்.. (ஆங்கிலத்திலும் யேர்மனிமொழியான டொச்சிலும் காணலாம்)

***Armin Laschet - CDU - Christian Democratic Union of Germany (Christlich Demokratische Union Deutschlands)***

***Markus Söder - CSU - Christian Social Union in Bavaria (Christlich-Soziale Union in Bayern)***

***Olaf Scholz - SPD - Social Democratic Party of Germany. (Sozialdemokratische Partei***




***Deutschlands)***

***Alice Weidel & Tino Chrupalla - AfD - Alternative for Germany (Alternative für Deutschland)***

***Christian Lindner - FDP - Free Democratic Party (Freie Demokratische Partei)***

***Janine Wissler & Dietmar Bartsch - Left - The Left(Die Linke)***

***Annalena Baerbock - Green - Alliance 90/The Greens(Bündnis 90/Die Grünen)***

1. ***CDU*** - கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி
2. ***CSU*** - கிறிஸ்தவ சமூக முன்னணி பவேரியா (பயான்)
3. ***SPD*** -சோஷலிச ஜனநாயகக் கட்சி
4. ***A&D*** -மாற்றத்திற்கான ஜேர்மனிய கட்சி
5. ***FDP***- சுதந்திர ஜனநாயகக் கட்சி
6. ***Die Linke*** - இடதுசாரிக்கட்சி
7. ***Grünen*** - பசுமைக்கட்சி

தேர்தலில் அரசியல் முப்பதுக்கும் மேற்பட்ட சிறிய-பெரிய அரசியல் கட்சிகள் போட்டியிட்டன. இவற்றில் முக்கியமான இந்த ஏழு கட்சிகளுமே அதிகப்படியான வாக்குகளைப் பெறுவது வழக்கமாகும். இதில் ஒரு கட்சி அல்லது கூட்டாகப் பல கட்சிகள் சேர்ந்து அரசை அமைக்கும்.

யேர்மனிய அரசியல் வரலாற்றில் இதுவரை எட்டு (8) கான்சிலர்கள் பதவி வகித்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு பெண்மணிதான் அஞ்சலா மேர்கல் மட்டும் பெண் கான்சிலராவர். ***(Angela Merkel)*** அடுத்து வருபவர் யார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்..

யேர்மனியில் முன்னாள் கான்சிலர்களின் விபரம்...

1. ***Konrad Adenauer (1949-1963)***
2. ***Ludwig Erhard (1963-1966)***
3. ***Kurt Georg Kiesinger (1966-1969)***
4. ***Willy Brandt (1969-1974)***
5. ***Helmut Schmidt (1974-1982)***
6. ***Helmut Kohl (1982-1998)***
7. ***Gerhard Schröder (1998-2005)***
8. ***Angela Merkel (2005 - 2021)***




# இசை
# அத்தியாயம் சரிந்தது

## வர்ண ராமேஸ்வரன்

இவர் குரலில் அமைந்த பாடல்கள் - அது சாத்திரிய சங்கீதப் பாடலாக இருக்கட்டும், மெல்லிசைப் பாடல்களாக இருக்கட்டும், ஏன் இவர் குரலில் வந்த தாயகப் பாடல்களாக இருக்கட்டும் கேட்பவரைத் தம் வசப்படுத்தும் வல்லமை இவர் குரலுக்கு உண்டு. ஈழத்து இசையில் இசைக் குடும்பப் பின்னணியுடன் உள் நுழைந்திருந்தாலும், தன் தனித்துவமான குரலால் அனைவரையும் கட்டிப் போட்டவர்.

யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் கலைமாமணி பட்டத்தைப் பெற்றவர். இவர் தந்தையார் சங்கீத வித்துவான் வர்ணகுலசிங்கம். இவர் தந்தையார் மறைந்த இசை மாமேதைகள் மகாராஜபுரம் சந்தானம் மற்றும் மகாராஜபுரம் விஸ்வநாதையா அவர்களின் பிரதம சீடர்.

தெல்லிப்பளை வரதராஜ சர்மாவிடம் மிருதங்கம் பயின்றவர். மிருதங்கம், தவில், ஆர்மோனியம் நன்கு அறிந்த - பரிச்சயமான பல்துறைக் கலைஞனாக விளங்கினார் வர்ண ராமேஸ்வரன். இளமையிலே இசைப் பரிச்சயம் உடைய வர்ண ராமேஸ்வரன் அவர்கள் மிருதங்க வித்துவான் சிவபாதம், பாடகி பார்வதி சிவபாதத்தின் உறவினரும் கூட.



தெல்லிப்பளை மகாஜானக் கல்லூரியல் கல்வி கற்ற வர்ண இராமேஸ்வரன் அவர்களுக்கு அளவையூர் விநாசித்தம்பிப் புலவரின் கதாப் பிரசங்கத்திற்கு மிருதங்கம் வாசிக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அளவையூர் விநாசித்தம்பிப் புலவர் தான் தந்தையாரின் பெயரின் முற்பகுதியையும் இணைத்து வர்ண ராமேஸ்வரன் எனப் பெயர் சூட்டினார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் வரிகளில் உருவான நல்லை முருகன் பாடல்கள், மற்றும் திசையெங்கும் இசை வெள்ளம், ஊர் போகும் மேகங்கள் என தாயக மண் வாசம் கமழும் இறுவட்டுக்களை வெளியிட்டிருக்கிறார்.

உலகத் தமிழர் மத்தியில் “எங்கே எங்கே ஒரு தரம் உங்கள் விழிகளைத்

திறவுங்கள்' எனக் கேட்கின்ற போதே கண்ணீரை வர வைக்கின்ற துயிலுமில்லப் பாடலான "தாயக கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே" பாடல் ஊடாக நன்கு பரிச்சயமானவர்.

பல்வேறு வித்துவான்களையும், கலைஞர்களையும் தந்த யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள அளவெட்டி எனும் கிராமத்திற்கு அருகே உள்ள சிறுவிளான் எனும் சிற்றூர் தான் இக் கலைஞன் பிறந்த மண், பின் யாழ்ப்பாணம் , வன்னி , கொழும்பு என வாழ்ந்து கால ஓட்ட மாற்றத்தில் புலம்பெயர்ந்து அவர் இறக்கும் வரை கனடாவில் வசித்து வந்தார்.

பல்துறைக் கலைஞரான வர்ண ராமேஸ்வரன் அவர்கள் , யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இசை விரிவுரையாளராக இருந்திருக்கிறார், தென் இந்தியாவில் சென்னையிலும் இசை பயின்றுள்ளார்.

வர்ணம் எனும் இசைப் பள்ளியினையும் கனடாவில் நடாத்தி வந்துள்ளார். நிதர்சனப் பொறுப்பாளராக பரதன் அவர்கள் இருந்த காலத்தில் வர்ண ராமேஸ்வரன் அவர்கள் அழைக்கப்படுகிறார், பூபாளம் பாடும் நேரம், பூ மலர்ந்தது கொடியினில் என இவ் இரு பாடல்களையும் பாடுவதற்கு பயிற்சி எடுத்துவருமாறு அனுப்பப் படுகின்றார். தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த ஒலிப்பதிவு தடைப்பட்டு பாடல்கள் இரண்டும் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்திர்ற்கு வழங்கப்படுகின்றது.

பின்னர் புதுவை இரத்தினதுரையின் அழைப்பின் பேரில் விழித்தெழுவோம் (1992) ஒலி நாடாவில் புறமொன்று தினம் பாடும் பெண் புலிகள், கரும்புலிகள் ஒலி நாடாவில் தாயக மண்ணின் காற்றே, எதிரியின் குருதியில் குளிப்போம், பூநகரி வெற்றிச் சமர் ஒலி நாடாவில் அப்புகாமி பெற்றெடுத்த லொகு பண்டா மல்லி, போன்ற பாடல்களைப் பாடும் வாய்ப்பு அவருக்கு ஏற்படுகின்றது. இதன் பின்னர் புதுவையர் வர்ண ராமேஸ்வரன் கூட்டணியில் நல்லை முருகன் பாடல்கள் ஒலிநாடா வெளியாகின்றது.

1992ம் ஆண்டு கிளாலி கடல் நீரேரிப் பாதையில் இடம் பெற்ற மோதல் காரணமாக பாடகர் சாந்தன் அவர்கள் வன்னிக்குள் சிக்கிக் கொள்ள, அவர் யாழிற்கு வர வேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த புதுவை இரத்தினதுரை அவர்களிற்கு ஏமாற்றமே எஞ்சுகிறது. உடனடியாக புதுவையர் வர்ண ராமேஸ்வரனை தன் இல்லத்திற்கு அழைக்கிறார். முக்கியமான ஓர் பாடல், நீதான் இதனைப் பாட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றார்.

**"எங்கே எங்கே ஒருதரம் உங்கள்**

**விழிகளை இங்கே திறவுங்கள்**

**ஒரு தரம் உங்களின் திருமுகம்**

**காட்டியே மறுபடி உறங்குங்கள்"**

அவர் இந்த வரிகளைப் பாடும் போதே புல்லரித்துப் போனதாய் வெளிச்சத்திற்கான ஓர் செவ்வியில் பகிர்ந்திருந்தார்.

புதுவையர் சாய்மனைக் கட்டிலில் அமர்ந்தவாறு இன்னுமொருக்காப் பாடும் ஐசி எனக் கேட்டுக் கேட்டுக் கொண்டாராம். இப்படி 3 தடவைகள் கேட்ட பின் 10 நிமிடங்கள் மௌனமாய் புதுவையர் இருந்தாராம், இறுதியில் ஒரு பெரு மூச்சுடன்



எழுந்து மறுநாள் மாலை ஐந்தரை மணிக்கு ஒலிப்பதிவுக் கூடத்திற்கு வருமாறு அழைக்கப் பட்டார்.

இசைவாணர் கண்ணன் ஆர்மோனியம், சதா வேல்மாறன் தபேலாவுடனும், ஜெயராமன் வயலினுடனும் இசையமைக்க பாடல் ஒலிப்பதிவு ஆரம்பமாகின்றது. அருகே நின்றிருந்த மேஜர் சிட்டு, ராதிகா, மணிமொழி போன்ற கலைஞர்களும் இப்பாடலை முணு முணுக்க ஆரம்பிக்க "எங்கே எங்கே" என்ற வரிகளை எல்லோரும் சேர்ந்தே பாடுங்கள் என புதுவை இரத்தினதுரை அவர்கள் கூறுகிறார்.

ஒலிப்பதிவு முடியும் போது காலை 03 மணி, ஆனால் பாடகர் சாந்தன் அவர்கள் தவற விட்ட, இந்த ஓர் பாடல், வர்ண ராமேஸ்வரனின் குரலால் உயிர் பெற்று ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க பாடலாக அமையப் போகின்றது என்பதை அப்போது அங்கிருந்த எந்த ஓர் கலைஞர்களும் அறிந்திருக்கவில்லை.

1992ம் ஆண்டு மாவீரர் நாளின் இறுதி நாள், புதுவையரைச் சந்திக்க வந்திருந்த வர்ண இராமேஸ்வரன் அவர்களுக்கு ஆச்சரியம் காத்திருக்கிறது. புதுவையர் ராமேஸ்வரனை கட்டித் தழுவிப் பாராட்டினார், சிறிது நேரத்தில் காக்கா அண்ணை வந்து தலைவரே பாடல் கேட்டு வியந்திருப்பது பற்றி பகிர்ந்து கொண்டார். பின்னர் 11.30 மணியளவில் சு.ப தமிழ்ச் செல்வனும் வந்து பாராட்டினார்.

இவர்கள் அனைவரையும் ஏற்றிக் கொண்டு வாகனம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தை நோக்கி விரைந்தது. 12 மணியானதும் கோவில்களில் மணி ஒலிக்க , புலிகளின் குரலில் துயிலுமில்லப் பாடல் ஒலிக்க ஆரம்பிக்கிறது. அந்தப் பாடலிற்கான மகிமை - மகத்துவம் அப்போது உணரப்படுகின்றது. நெய் விளக்கு ஏற்றப்படும் அதே சமயத்தில் வர்ண ராமேஸ்வரனையும் பாடலைச் சேர்ந்தே பாடுமாறு புதுவையர் கேட்டுக் கொண்டார். அந்தக் குரலும், குரலினால் வெளிப்பட்ட பாவங்களும் கேட்போர் அனைவரையும் - ஏன் கல் நெஞ்சங்களையும் கரைக்கும் வல்லமை கொண்டவையாக விளங்கியது என்றால் மிகையல்ல.

இது தவிர மெல்லிசைப் பாடல்களால் நம் மத்தியில் நன்கு பரிச்சயமானவர் வர்ண ராமேஸ்வரன் அவர்கள்,

**"மறந்து போகுமோ மண்ணின் வாசனை",**

**"வாசலிலே அந்த ஒற்றைப் பனை மரம்",**

**"ஊருக்கு மீளும் கனவு உனக்கில்லையாதமிழா?"**

இப்படிச் சில பாடல்களைக் குறிப்பிடலாம், தமிழீழத்தின் இசை வரலாற்றுக்கு வர்ண ராமேஸ்வரனின் இழப்பு - பேரிழப்பு






வி.சிவராசா

# யார் அடுத்த கான்சிலர்

எந்தக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத படியால் ஆட்சி அமைப்பதில் சிக்கல் தோன்றியுள்ளது. ஜேர்மனியின் ஞாயிற்றுக் கிழமை நேற்று 26.09.2021 அன்று நடைபெற்ற பொதுத்தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியினர் வெற்றியைப் பெற்றனர்.

2005 முதல் ஏஞ்சலா மெர்க்கலின் கீழ் 16 வருடங்கள் ஆட்சி செய்துவந்த பழமைவாத கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் (CDU) ஆட்சி இத்துடன் முடிவுக்கு வருகிறது.

மெர்க்கலின் CDU + CSU பழமைவாதக் கூட்டணிக்கு 24.2% வாக்குகள் கிடைத்து 195 இடங்களை கைப்பற்றிய நிலையில், மத்திய-இடது சமூக ஜனநாயகவாதிகள் கட்சி (SPD) 26.0% வாக்குகளைப் பெற்று 210 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

மேலும், பசுமை அரசியல் காட்சிகள் என்று சொல்லக்கூடிய *Alliance 90/The Greens* கூட்டணி கட்சிகள் 112 இடங்கள், FDP 93 இடங்கள், AFD 86 இடங்கள், *The Left* கட்சி 40 இடங்கள் மற்றும் இதர காட்சிகள் 1 இடத்தையும் கைப்பற்றின.

மொத்தம் 736 இருக்கைகள் (M.P) கொண்ட பாராளுமன்றத்தில் 369 இருக்கைகளை ஒரு கட்சி பெற்றால்தான் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஆனால் எந்தக் கட்சியும் இந்த 369 எண்ணிக்கையைப் பெறவில்லை.

SPD கட்சி கடந்த 2017 பொதுத் தேர்தலில் போது, 20.5% வாக்குகளை மட்டுமே பெற்ற நிலையில், தற்போது கூடுதல் 26.0% வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

தற்போது ஏதேனும் ஒரு கட்சி பெரும்பான்மையை பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மற்ற கட்சிகளுடன் கூட்டணியை அமைக்க வேண்டும். ஒரு மாத காலத்துக்குள் கூட்டணிகள் முடிவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நிலையில், **Olaf Scholz** ஜேர்மனியின் அடுத்த சான்செலராக பதவியேற்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியானால், SPD கட்சி சார்பாக பதவி ஏற்கப்படும் நான்காவது சான்செலராக **Scholz** இருப்பார்.

ஆனால் எந்தக்கட்சியும் 26 வீத வாக்குகளுக்குமேல் பெறாத காரணத்தால். ஆட்சி அமைப்பதில் இழுபறிநிலை தோன்றியிருப்பதுடன் யேர்மனியின் அதிகாரம் மிக்க பதவியான கான்சிலர் பதவி தெரிவிலும் உடனடியாகத் தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்று நிலைகள்..

யேர்மனியில் முன்னர் ஆட்சிசெய்த கட்சிகளான CDU கட்சியும் SPD கட்சியும் ஒன்று சேர்ந்து ஆட்சி அமைக்கலாம்.

அல்லது CDU கட்சியுடன் ஏனைய சிறிய இரண்டு கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கலாம்.

அல்லது SPD கட்சியுடன் ஏனைய சிறிய இரண்டு கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கலாம்.

இவற்றில் எது சாத்தியப்படும் என உடனடியாகக் கூறமுடியாது. இனி ஒவ்வொரு கட்சிகளும் எனைய கட்சிகளுடன் பேரம் பேசுதல் ஒப்பந்தம் செய்தல் பேச்சுவாத்தை செய்தல்கள் மூலமே இறுதி முடிவு எட்டப்படும். எப்படியும் இன்னும் ஒரு மாதத்திற்குள் முடிவுகள் எட்டப்படும். சில நாட்களின் பின் முடிவுகள் கிடைத்துவிடும். அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்..




17 YEARS

Radio - by - Phone

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60

அழையுங்கள்! வானொலியைத்
கேட்டு மகிழுங்கள்..!!



மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm


BOX
வழங்கும்
அதிரடி விருந்து
ஐந்து!
IPL
மாஸ்டர் செஃப்
BIGG BOSS 5
SURVIVOR
T20
ICC
MEN'S T20
WORLD CUP
2021